Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை: ரூபா 6.00

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 03 (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :185

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்

(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-764)



பக்தாத் வீதியில் ஈராக் குடியரசுக் காவற்படையின் ரீ-72 டாங்கி ரோந்து. உள்ளே - ஆட்லறியை இழுத்துச் செல்லும் ஈராக்கிய ட்ரக் வண்டி.





ஈராக்கியத் தலைநகரில் ஜனாதிபதி சதாம் ஹுசைன், வீதியில் பொதுமக்களை நேரில் சந்தித்து உரையாடுவதை முதற்படத்திலும், மகிழ்ச்சியில் அவரது கையை முத்தமிடும் பொதுமகனை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# வெளிநாட்டு உதவியை பெறவே
# அரசியல் தீர்வில் அரசு ஆர்வம்!

## அன்றாடப் பிரச்சினைகள் மாத்திரமே அடுத்த சுற்றுப் பேச்சில் - கருணா



'தமிழ் அலை' முதற் பிரதியை கௌசல்யனிடமிருந்து பெறுகிறார் கருணா.

(மட்டக்களப்பு)

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இயல்புநிலை ஏற்படுத்தப்படும் வரை, அரசியல் தீர்வு யோசனைகள் பற்றிய சமாதானப் பேச்சுக்கு இடம் இல்லை என, விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணா கூறியுள்ளார்.**

நேற்று, மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலையில், புதிதாக வெளிவரும் 'தமிழ் அலை' தினசரிப் பத்திரிகையின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி முதல் மே மாதம் முதலாம் திகதிவரை தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் ஏழாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில், இலங்கை அரசு அரசியல் தீர்வு பற்றிப் பேசவேண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றுமுதல் ஞாயிறிலும் ஏ-9

இன்று முதல் வாரத்தின் ஏழு நாட்களும் ஏ-9 பாதை பயணிகளின் போக்குவரத்திற்காகத் திறக்கப்படும். இந்நாட்களில் ஓமந்தை தடைமுகாமும், முகமாலை தடைமுகாமும் திறந்திருக்குமென, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

தற்போது பயணிகளின் மேலதிக போக்குவரத்து வசதிகளை கருத்தில் எடுத்து, ஞாயிற்றுக்கிழமையிலும் ஏ-9 பாதையூடான போக்குவரத்திற்கு ஆவன செய்யுமாறு, செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலைப் புலிகளும்இலங்கை அரசாங்கமும் கூட்டாகக் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து இன்றுமுதல் வாரத்தின் ஏழு நாட்களும் ஏ-9 பாதை திறக்கப்படுகின்றது.

## பரீட்சை முடிவுகள் வெளியாகின




க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் நேற்றிரவு இணையத் தளத்தில் வெளியாகின. இதனை www.doenets.lk எனும் இணைய முகவரியூடாகப் பார்வையிடலாம். அத்தோடு அனைத்துப் பாடசாலைகளுக்குமான முடிவுகள் அனுப்பப்பட்டுவிட்டன என்றும், நாளை அவை பாடசாலைகளுக்கு வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சு)

## விண்ணாணம் விநாசியர்



பக்தாத்தைப் பிடிக்கிறதை பப்படம் நொருக்கிற மாதிரியெல்லே அமெரிக்கா சொல்லுது!

# விடுதலைப் புலிகள் தொடர்பில் அமெரிக்கா இரட்டைப்போக்கு!

## தூதுவரிடம் ஜனாதிபதி சந்திரிகா கண்டனம்

விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பில் அமெரிக்கா தெளிவற்ற போக்கினைக் கடைப்பிடித்து வருவதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸினைச் சந்தித்து உரையாடியபோது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, விடுதலைப் புலிகள் தொடர்பில் இரட்டைத்தன்மையைப் பேணுவதாகவும்- ஒரு புறத்தில் சமாதான நடைமுறைகளில் விடுதலைப் புலிகளுக்கு உதவிவருகின்ற அதேவேளை, மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பினை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்தும் பேணிவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தமது கட்சி (10 ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் விவகார உபகுழுக்கூட்டம்
# உயர்மட்டச் சந்திப்புக்கான திட்டவரைபு பூர்த்தியானது!

பெண்கள் விவகாரம் தொடர்பான உப குழுவின் இரண்டாவது கூட்டம் கடந்த இரண்டு நாட்களாக கிளிநொச்சியில் இடம்பெற்றது.



தொடரும் சமாதான நகர்வில் பெண்கள் விவகாரம் தொடர்பான விடயங்கள் ஆக்கபூர்வமாக உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் பெண்கள் விவகார உபகுழு புலிகளாலும், அரச தரப்பாலும் உருவாக்கப்பட்டது.

இந்த உப குழுவின் முதல் கூட்டம் கடந்த மார்ச்சில் கிளிநொச்சியில் இடம்பெற்றது. அரச தரப்பால் நியமிக்கப்பட்ட ஐந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து கோட்டை ரயில் நிலையத்தில் போராட்டம்

மலையக மக்கள் முன்னணி ஏற்பாட்டில், சமாதானத்துக்கு ஆதரவாக கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக சத்தியாக்கிரகம் நேற்று நடைபெற்றது.

நேற்றுக்காலை ஆரம்பமான இந்தச் சத்தியாக்கிரகத்துக்கு பெருந்தொகையானோர் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சமாதானத்துக்கு எதிராகச் செயற்படுவோரைக் கண்டித்தே இந்தச் சத்தியாக்கிரகம் ஏற்பாடுசெய்யப்பட்டதாக அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வாழ் தமிழ் மக்கள் மற்றுமொரு யுத்தத்துக்கு முகம் கொடுக்கத் தயாரில்லையென்பதையும் அதேவேளை, தமது உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதையும் சர்வதேச சமூகம் உட்பட அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

சமாதானத்துக்கு எதிரான சக்திகளும், இனவாத அரசியற் குழுக்களும் இந்த நாட்டில் ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடத்திக் கொண்டிருந்தால், இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் சமா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மருதனார்மடத்தில் பாரிய சந்தை!

(யாழ்ப்பாணம்)

நேற்று ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்த பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன, மருதனார்மடம், சங்கானை சந்தைகளுக்கு சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

பின்னர் அமைச்சர், நல்லூர் கமநலத்திணைக்களத்துக்கும் வருகை தந்தார். அங்கு அவர் விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

பிரதமரினதும், அமைச்சர் மகேஸ்வரனினதும் கோரிக்கையின் பேரில், மருதனார்மடம் பகுதியில் பாரிய சந்தைத் தொகுதியொன்றை விரைவில் அமைக்க தமது அமைச்சு

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

(சி-730) 021-2223916, 0777-517019, 01-505632, 074-61265





நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன, இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் சகிதம் விவசாயத் திணைக்களத்துக்கு வருகை தருவதை முதலாவது படத்திலும், அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றிய விவசாயிகளை இரண்டாவது படத்திலும், விவசாயிகளுடன் அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்துரையாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.






பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் இந்துவிவகார அமைச்சர் ஆகியோர் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பங்குபற்றுவதையும், வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு வெற்றிக்கிண்ணத்தை பிரதி நிதி அமைச்சர் வழங்குவதையும், தொடர்ந்து நாகவிகாரைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர்கள் விகாராதிபதியுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: எவ். எக்ஸ்.சுதர்சன்)

## செய்தியாளர்களை படம் பிடித்த படையினர்

நேற்றுமுன்தினம் யாழ்.பஸ் நிலையத்தில் நடைபெற்ற முஸ்லிம்களின் அமெரிக்க எதிர்ப்புப் பேரணிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களை, ராணுவப் புலனாய்வுப் பிரிவினர் புகைப்படம் எடுத்துள்ளனர். (சு)

## விபத்தில் காயம்

வேகமாக சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் குறுக்கே ஆடு பாய்ந்ததால் ஏற்பட்ட விபத்தில், மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் காயமடைந்தார்.

உடுப்பிட்டி புளியடியில் நடைபெற்ற இவ்விபத்தில், கரணவாய் சுரவத்தையைச் சேர்ந்த சின்னத்துரை நாகலிங்கம் (வயது 62) என்பவரே காயமடைந்தவராவார். இவர், மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (23)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீடும்வளவும் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். தொடர்பு: 511(161), மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம். (304)

### தேவை

மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகளும், ஆங்கில அறிவுள்ள பழக விரும்பும் பெண் பிள்ளைகளும் தேவை. தொடர்புகட்கு:- புதிய குறிஞ்சி மருந்தகம், பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி. (மாணவர் பேரவைக்கு முன்பாக) T.P. 222 5238 (306)

### உடன் தேவை

ஆண்களுக்கான ஆடைகள் தைப்பதில் அனுபவமுள்ள தையற்காரர் உடன் தேவை. நேரில்வரவும்.
**Tee Ciy Tailoring** 125, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.(சி-743)

### மலிவு விற்பனை

10″, 12″, 14″, 16″ சைனா மெஷின்கள் (**China Machine**) வெல்டிங் பிளான்ட், றில்லர்கள், ஜெனரேட்டர்கள் ஏனைய எலெக்ரிக் சாமான்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- கி.சுதாகரன், இல.20, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பணம்.

(சி-750)

### விற்பனைக்கு

ஹையஸ் (**Hiace** - ருக்மணி) வான் விற்பனைக்கு உண்டு.

விடுமுறை நாட்கள் தவிர மற்றைய நாட்களில் காலை 9 - மாலை 5 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்பு:-
கோறல் டெஸ்டிபூட் இண்டஸ்றீஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-745)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜய்,ரீமா சென் நடித்த
**பகவதி**
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**BEST OF THE BEST**
10.04.2003 முதல் Jurassic Park-3
(சி-731)

**ராஜா** யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா
நடித்த
**ரோஜாக்கூட்டம்**
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 9.30 இற்கும்
(சி-732)

## அன்பான வேண்டுகோள்

கடந்த 28.03.2003ல் மாலை கடைசியாக எயாப் போட் பஸ் வந்து தரித்து நிற்கும் இடத்தில் பச்சைக் கல் பதித்த பவுண் மோதிரம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் கொடுத்து அதற்கான சன்மானத்தை பெற்றுக் கொள்ளவும்.

தே.இ.பிள்ளை,
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்:- 021 - 2225542 (சி/762)

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka

Institute of Informatics Studies

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

பூபாலசிங்கம் புத்தகசாலை

Elephant house
Necto

அனுசரணையில்

நமது ஈழநாடு நடாத்தும்

## க.பொ.த (உயர்தரம்) 2003

வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் இலவச முன்னோடிக் கருத்தரங்கு

ஆசிரியர் குழாம்

வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam
பொருளியல்:- திரு.இராஜேஸ்வரன்

காலம்:- 11.04.2003
நேரம்:- காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.


## இன்றைய நாள் இனிய நாள்

**06-04-2003 - ஞாயிற்றுக்கிழமை**

- **மேடம்** :- இல்லச்சிறப்பு, சரீர வாட்டம், பணக்குறைவு, களஸ்திரசுகம், தொழில் சமம்.
- **இடபம்** :- நேத்திர ரோகம், நினைத்த காரிய தடை, அலைச்சல், வயிறு, மார்பில் வலி.
- **மிதுனம்** :- வாக்கு வசீகரம், சத்துரு ஜயம், செளக்கியம், குடும்பச் சிறப்பு, பெரியோர் மதிப்பு.
- **கர்க்கடகம்** :- நேத்திரரோகம், நிலைப்பிரிவு, வாக்குகலகம், பொதுசனமதிப்பு, பணவரவு.
- **சிங்கம்** :- காரியசித்தி, ஆரோக்கியம், பிரயாசமிகுதி, ஆபரண லாபம், இல்லச்சிறப்பு.
- **கன்னி** :- வாகனலாபம், நிலைமாற்றம், ஆரோக்கியம், பணவரவு, பிரயாணத்தால் நன்மை.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

- **துலாம்** :- வீண்பயம், ரோகம், காரியதாமதம், சரீர சுகக் குறைவு, அவமானம்.
- **விருச்சிகம்** :- தொழில் சிறப்பு, தனித்தநிலை, ஐஸ்வரியம், பொருள் வரவு.
- **தனு** :- எடுத்த காரியத்தில் தடை தாமதம், செளபாக்கியம், இனசன கொண்டாட்டம்,
- **மகரம்** :- குடும்பச் சிறப்பு, களஸ்திரசுகம், அதிகாரசித்தி, பொருட்பேறு, தொழில்நன்மை.
- **கும்பம்** :- தேகமெலிவு, சத்துருபயம், லட்சுமிகரம்,இனசன விரோதம், பிரயாசமிகுதி.
- **மீனம்** :- புதிய ஸ்தானம், சிநேகலாபம், சுபகாரியசித்தி, குடும்பனுகூலம்.

### ஈராக் போரினால் ஏற்றுமதியில் பெரும் சரிவு

# எமது தேயிலையை வாங்குங்கள்; அமெரிக்காவை கேட்கும் இலங்கை!

(கொழும்பு)

உலகச் சந்தையில் இலங்கைத் தேயிலையின் விற்பனைக்கு உதவுமாறு அமெரிக்காவை, இலங்கை அரசாங்கம் கேட்டிருக்கிறது.

இலங்கைத் தேயிலையைக் கொள்வனவு செய்யும் பிரதான நாடான ஈராக்கும் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளும் தற்போது ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக- தேயிலையை விற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் - இலங்கை அரசாங்கம் இந்த உதவியைக் கோரியிருப்பதாகப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

தம்மிடமிருந்து தேயிலையைக் கொள்வனவு செய்யுமாறு - அமைச்சர் கிரியெல்ல, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி விலசைச் சந்தித்துக்குக் கேட்டுள்ளார்.

இதேவேளை - உலகச்சந்தையில் இலங்கைத் தேயிலையின் கொள்வனவு குறைந்திருப்பதால் - தேயிலையின் விலையும் கணிசமாகச் சரிந்திருப்பதாகவும்,

அரசாங்கம் உடனடியாக உதவாவிட்டால் தாம் பெரும் நட்டத்தைச் சந்திக்க வேண்டி வருமென்றும் - உள்ளூர் தேயிலை ஏற்றுமதியாளர்கள் அறிவித்துள்ளனர்.

# சுதந்திரக் கட்சியின் மேதினம் குருநாகலில் இருந்து மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது மேதினக் கூட்டத்தை குருநாகலில் நடத்த திட்டமிட்டிருந்தபோதும், பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள கட்சிகளின் வற்புறுத்தலின் பேரில் கொழும்பில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

சுதந்திரக்கட்சி தனியாக குருநாகலில் மேதினக் கூட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தது. ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணி எனக் கூட்டணி இருக்கும்போது, தனித்து மேதின விழாவை நடத்துவது சரியானதல்ல என ஏனைய கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தன.

அத்துடன், இந்தத் தருணத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து தமது பலத்தை வெளிக்காட்ட வேண்டும் என்றும், பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தெரிவித்திருந்தன. இதையடுத்தே, மேதினக் கூட்டத்தினைக் கொழும்பில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பல் பூங்காவில் இவ்வருட மேதினக் கூட்டம் பொதுஜன ஐக்கிய முன்னணியால் நடத்தப்படவுள்ளது. இது தொடர்பான இறுதி முடிவு நாளை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்படும்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி இவ்வருடம் மேதினவிழாப் பேரணியை நடத்துவதில்லை என்றும், கூட்டத்தை மட்டும் காலிமுகத் திடலில் நடத்துவதென்றும் தீர்மானித்துள்ளது.

# சந்தேக நபர்களை மீட்பதற்கு பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

### வென்னப்புவவில் சம்பவம்

(புத்தளம்)

புத்தளம் மாவட்டம் - வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களை மீட்பதற்குப் பத்துப்பேர் கொண்ட குழுவொன்று மேற்கொண்ட முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை வென்னபுவ பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்த பத்துப்பேர் கொண்ட குழு அங்கு முறைப்பாட்டுப் பிரிவில் கடமையிலிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிளைத் தாக்கியது.

அத்துடன், உள்ளே சென்று தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களை விடுவிக்கவும் முயற்சி செய்தது. ஆனால், பொலிஸார் உஷாரடைந்து தாக்குதல் நடத்திய கும்பல் மீது பதில் தாக்குதல் நடத்த அவர்கள் தப்பிச்சென்றனர்.

அந்தக் குழுவில் இருந்த மூன்றுபேரை பொலிஸார் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர். ஏனையோரையும் கைதுசெய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# கனவுலகில் மிதக்கும் கண்காணிப்புக் குழு

### சரத் அமுனுகம பாய்ச்சல்

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவூடாக அரசாங்கம் இந்த நாட்டு மக்களை ஏமாற்ற முயல்வதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப்பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக்குழுவின் சில அறிக்கைகள் இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளன. சீன மீன்பிடிப் படகு மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட அறிக்கை பற்றி அமுனுகம கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கண்காணிப்புக் குழுவினர் கனவுலகில் மிதக்கிறார்கள். தாங்கள் மூன்றாம் தரப்பினர் எனவும், தமக்கு எதுவும் தெரியாது என்றும் கூறிவருகிறார்கள். இதைப் புலிகள் செய்தார்களா? கடற்படையினர் செய்தார்களா? என்பது பற்றிக் கூறாமல் தமக்குத் தெரியாமல் ஆயுதம் ஏந்திய மூன்றாவது குழுவொன்று கடற்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். இவர்கள் இப்போது ஆயுதம் ஏந்திய மூன்றாவது குழுவொன்றை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சரத் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

### கூட்டணி அமைப்பது தொடர்பாக

# சோமவன்ச அமரசிங்கவின் பரிந்துரை சுதந்திரக் கட்சியிடம் சமர்ப்பிப்பு!

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனான கூட்டணியை அமைப்பது குறித்த ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தயாரித்துள்ள பரிந்துரை அறிக்கை, சுதந்திரக் கட்சியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணியை அமைப்பது குறித்த பேச்சுக்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே, சோமவன்ச அமரசிங்கவின் பரிந்துரை அறிக்கை சுதந்திரக்கட்சி பிரமுகர்களிடம் கையளிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான திட்ட அறிக்கையொன்றை சுதந்திரக்கட்சி ஏற்கனவே ஜே.வி.பியிடம் வழங்கியிருந்தது. இந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னரே சோமவன்ச அமரசிங்கவின் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

சோமவன்ச அமரசிங்கவின் அறிக்கை ஜனாதிபதி சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அவரது கருத்தை அறிந்த பின்னரே ஜே.வி.பியினருடன் அடுத்த கட்டப் பேச்சுக்கள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### மகாபொல கொடுப்பனவு

(துன்னாலை)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுள் மகாபொல கொடுப்பனவு பெறும் மாணவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது. உரியவர்களை நேரில்வந்து பெற்றுக்கொள்ளுமாறு - யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

# யசூஷி அகாஷி மீண்டும் அடுத்த மாதம் வருவார்

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி மீண்டும் அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜப்பானில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் பற்றி ஆராயவும், சமாதான முயற்சிகளை முன்னேற்றகரமான முறையில் கொண்டு செல்வது பற்றி ஆராயவே இவர் இலங்கை வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கை வரும் அகாஷி- அரசாங்கத் தரப்பினரை மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்திக்கவும், முயற்சிகளைச் செய்வார் எனத் தெரியவருகிறது.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்கு முன்னர் அல்லது பின்னர் - புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருவார் என்றும், அப்போது அகாஷியுடன் சந்திப்பு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வொஷிங்ரன் மாநாடு; இந்தியா முடிவு இல்லை

இம்மாதம் 14 ஆம் திகதி அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்ரனில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் முன்னோடி மாநாட்டில் இந்திய அரசு கலந்துகொள்வது பற்றி எந்த இறுதி முடிவும் எடுக்கவில்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி இன்னும் இரண்டொரு தினங்களில் முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்கா - இந்த மாநாட்டில் இந்தியாவைக் கலந்துகொள்ளும்படி முறையான அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்க அரசு நடத்தும் இந்த மாநாட்டுக்கு விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்படாமல் இருப்பதால், இந்தியா கலந்துகொள்வதில் எந்தவித தடையுமில்லை என இந்திய அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

### ரத்வத்தவுக்கு பிணை மீண்டும் மறுக்கப்பட்டது

உடத்தலவின்ன படுகொலை வழக்கில் - சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்குப் பிணை வழங்க மீண்டும் மறுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கை விசாரிப்பதற்கு மூன்று பேர்கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள் - அனுருத்த ரத்வத்தவுக்கும், ஏனைய பதினைந்து பேருக்குமான பிணை மனுக்களை நிராகரித்தனர்.

# கண்ணிவெடியிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக நிதியுதவி!

### ஐரோப்பிய யூனியன் வழங்கியது

(கொழும்பு)

ஐரோப்பிய யூனியன், வட- கிழக்குப் பகுதி மக்களின் நலன்கருதி அறுபது கோடி யூரோ நாணயங்களை உதவியாக வழங்கியுள்ளது.

வட - கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கே ஐரோப்பிய யூனியன் அதிகளவிலான நிதியைச் செலவிடவுள்ளது.

அத்துடன், இடம்பெயர்ந்துள்ள 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கான உணவுப் பாதுகாப்புத் திட்டத்துக்கும், ஐரோப்பிய யூனியனின் நிதியுதவி பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த வெண்நிலவன் உரையாற்றுவதையும், சட்டத்தரணி இ.உருத்திரா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உப தலைவர் ஆர்.ஈ.ஆனந்தராசா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்.நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி, வின்சன் டீ போல் ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

# யாழ்ப்பாண நிலவரம் பற்றி ஆராய தமிழ் எம்.பிக்கள் குழு வருகிறது

யாழ்.குடாநாட்டின் நிலவரங்கள் குறித்து நேரில் அவதானித்து அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று இந்த வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளது.

குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள், இடம்பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், உயர்பாதுகாப்பு வலயத்தால் மீள்குடியமர்வில் தோன்றியுள்ள நெருக்கடிகள் குறித்து அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் ஆராயவுள்ளனர்.

குடாநாட்டுக்கு வந்து, தாம் அவதானித்த விடயங்களை இவர்கள் அறிக்கையாகத் தயாரித்து - நோர்வே அரசாங்கம், இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த அறிக்கையை அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின் போது இருதரப்பினரதும் கவனத்துக்கு எடுத்துச்செல்லவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# நெடுந்தீவில் முழு அளவில் மின்சாரம் வழங்குமாறு மக்கள் கோரிக்கை

(நெடுந்தீவு)

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நெடுந்தீவுக்கான மின்விநியோகத்தை மின்சாரசபையினர் பொறுப்பேற்று வழங்கி வருகின்றனர்.

இதில் - நெடுந்தீவு துறைமுகம் தொடக்கம் சீக்கிரியாம்பள்ளம் வரைக்குமான இரண்டரைக் கிலோமீற்றர் நீளமான பிரதானவீதியின் இருபக்கங்களிலுமுள்ள அரச கட்டடங்கள் மற்றும் சில வீடுகளுக்குமே மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது. ஆனால், இப்பகுதியில் வீதி விளக்குகள் எதுவும் பொருத்தப்படவில்லை.

தற்போது வழங்கப்படும் மின்சாரத்தின் மூலம் குறிப்பிட்டளவான பாவனையாளரே பயனடைகின்றனர்.

பிரதான வீதியைவிட்டு உள்ளேயுள்ள மக்கள் மின்சாரம் பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கொடுத்துவிட்டு எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனாலும் - இப்பகுதிகளுக்கு மின் வழங்குவதற்கான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவிலலை என்பதுடன், இது தொடர்பாக உரியவர்களுடன் பேசினால் விஸ்தரிக்க நிதி ஒதுக்கீடு இல்லை எனவும், புதிய மின்கம்பங்கள் இல்லை எனவும்கூறிக் காலம் கடத்தப்படுகின்றது.

எனவே, இது தொடர்பாக - உரிய அதிகாரிகள் அனைவரும் நடவடிக்கை எடுத்து அனைவருக்கும் சீராக மின்சாரம் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென மக்கள் எதிர்பார்த்துள்ளனர். (112)

# 20 குறும்படங்களின் தொகுப்பு இன்று யாழ். பல்கலைக்கழகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் 20 இற்கு மேற்பட்ட "குறும்படங்களின் தொகுப்பு" இன்று காலை 10.00 மணிக்குப் புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் எனப் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

# கசிப்பு வழக்கில் சிக்கிய பலருக்கு அபராதம்!

சட்டவிரோதமாகக் கசிப்புக் காய்ச்சிய, கசிப்பு வைத்திருந்த, மற்றும் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த பலர் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களில் வில்லியம் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதமும்- வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இன்னொரு பெண்ணுக்கு 2500 ரூபா தண்டப்பணமாகவும், 500 ரூபா தர்மப் பணமாகவும் செலுத்த உத்தரவிடப்பட்டது.

ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்தைச் சோந்த ஒருவருக்கு 30,000 ரூபா தண்டப்பணமாகவும், 3000 ரூபா தர்மப் பணமாகவும் செலுத்துமாறும்- இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு 3000 ரூபா அபராதமும்- ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவருக்கு 5000 ரூபாவும்- பூநாறி லேன், வண்ணார் பண்ணையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு 25,000 ரூபா அபராதமாகவும்- 500 ரூபா தர்மப்பணமாகவும்,

கொக்குவில் மேற்கு கொக்குவிலைச் சேர்ந்த ஒருவருக்கு 1200 ரூபா அபராதமும்- அத்தியடி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு 1000 ரூபாய் அபராதமும்- பாடசாலை வீதி ஆறுகால் மடத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு 1000 ரூபாய் அபராதமும்- இராமநாதன் வீதி, கொக்குவிலைச் சேர்ந்த ஒருவருக்கு 750 ரூபாய் அபராதமும்- குருசுமதவடி ஆனைக் கோட்டையைச் சேர்ந்த ஒருவருக்கு 1000 ரூபா அபராதமும் செலுத்த யாழ்.மேலதிக நீதிவான் சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

# வடமராட்சியில் மீன்பிடிப்படகை மோதிய கடற்படைப் படகு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை முனைப்பகுதிக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த படகு மீது, கடற்படைக்குச் சொந்தமான படகு மோதியதில் மீன்பிடிப்படகு முற்றாகச் சேதமடைந்து நீரில் மூழ்கியுள்ளது. இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, படகிலிருந்த 4 மீனவர்கள் கடலிலே குதித்துத் தப்பியுள்ளனர். ஆனால், மீன்பிடி உபகரணங்கள் பலவும் நீரிலே மூழ்கியுள்ளன. இதனால், மீனவர்களுக்கு அறுபதாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (ச,சு)

# 20 தம்பதிகளுக்கு இன்று சட்டபூர்வத் திருமணப்பதிவு

யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையின் வெளிக்களச் சேவைத் திட்டத்தின் கீழ், இதுவரை திருமணப்பதிவினை மேற்கொள்ளாத 20 தம்பதியினருக்கு - மருத்துவ மாணவர்களின் உதவியுடன் சட்டபூர்வ திருமணப் பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்கீழ் - பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 20 தம்பதியினருக்கு இன்று பி.ப 2 மணிக்குப் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க காரியாலயத்தில் வைத்து திருமணப்பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது.



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபையால் ஜெயதங்கலீலாவதி ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட இலவசக் கண்ணாடி வழங்கும் வைபவத்தில் யூ.என்.எச்.சி.ஆர் யாழ். வதிவிடப் பிரதிநிதி, மோகன் மொறிஸ், பெண்ணொருவருக்குக் கண்ணாடி வழங்குவதையும், மாவட்ட வைத்திய அதிகாரி கே.மயிலேறும்பெருமாள், கரவெட்டிப் பிரதேச செயலர் க.கனகரத்தினம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கல் வீச்சில் காயம்!

(வடமராட்சி)

அயல் வீட்டுக்காரரின் கல் வீச்சுக்கு இலக்காகிய குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தநிலையில் மந்திகை மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை கரவெட்டியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் கரவெட்டி தெற்கைச் சேர்ந்த கணபதி கந்தசாமி (வயது 55) என்பவரே பலத்த காயமடைந்தார். (23)

## சிலைகள் புனரமைப்பு

(மானிப்பாய்)

புலோலியிலுள்ள தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் உருவச்சிலையையும், சதாவதானி கதிரவேற்பிள்ளையின் உருவச்சிலையையும் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 10 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யவுள்ளது.

புலோலி வாழ் பொதுமக்களின் கோரிக்கைகளை அடுத்தே, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (100)

## பயிற்சி நெறியில் பங்குபற்றியோருக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவால் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் பயிற்சிநெறியில், பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல் தொடர்பான கூட்டம் - இன்று கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (சு)

## கூட்டுறவு பரிசோதகர்களுக்கு அறிமுக வகுப்பு

யாழ்.மாவட்டத்தில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நாற்பது கூட்டுறவுப் பரிசோதகர்களுக்குமான அறிமுக வகுப்பு 8 ஆம், 9 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்புக்கள் யு.என்.டீ.பீ. நிறுவனத்தினரின் அனுசரணையுடன் நடாத்தப்படுகின்றது. புதிதாகச் சேர்ந்துகொண்ட கூட்டுறவுப் பரிசோதகர்களுடன் யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர்கள் மற்றும் அபிவிருத்தி, கணக்குப் பகுதிகளைச் சேர்ந்த சகல கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஆகியோரும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அழைக்கப்பட்டுள்ளனர்.

# கணித, விஞ்ஞான பாட வளர்ச்சிக்கு விசேட செயற்திட்டம் நடைமுறைக்கு

வட-கிழக்கு மாகாணத்தில் க.பொ.த சாதாரணதர மாணவர்களின் கணித, விஞ்ஞான பாட அடைவை மேம்படுத்த, விசேட செயற்திட்டமொன்று மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு கடந்த பெப்ரவரி மாதம் திருகோணமலையில் நடைபெற்றது.

பின்தங்கிய பிரதேசங்களின் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக, மூன்று தவணைகளுக்குரிய ஆசிரிய கையேடுகள்- ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

விஞ்ஞான பாடத்திற்கான விசேட செயற்திட்ட முன்னாயத்த வேலைகளுக்கமைய ஆண்டு 10, 11 ஆகிய இரு வகுப்புகளும் 9 பகுதிகளாகப் பிரித்து மதிப்பீடு செய்யத் தீர்மானித்துள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ரா)

# திருட வந்தவர்கள் வீட்டுக்காரரை கத்தியால் குத்திக் காயப்படுத்தினர்

(வடமராட்சி)

வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத கோஷ்டி- உறக்கத்திலிருந்த குடும்பஸ்தரைக் கத்தியால் குத்திவிட்டு தலைமறைவாகியுள்ளது. சம்பவத்தில் கத்திக்குத்துக்கு இலக்கானவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணிக்குப் பருத்தித்துறை விஸ்வகுல வீதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் சி.இராமச்சந்திரன் (வயது 57) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்காகி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

சம்பவதினம் - மேற்படி நபர் வீட்டு வளவிலுள்ள மரநிழலின் கீழ் உறக்கத்தில் இருந்திருக்கின்றார். வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத சிலரை இவர் கண்டதையடுத்தே, அவர்கள் இவர்களைக் கத்தியால் குத்தியுள்ளனர்.

இதையடுத்து விழிப்படைந்த குடும்பத்தினர் - சத்தமிட்டு அயலவரை அழைக்க, இந்தக் கோஷ்டியினர் தப்பியோடிவிட்டனர். மேற்படி நபர்கள் வீட்டில் திருடுவதற்காக நுழைந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (23)


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் :ஜெ.ஜீவிகா
முகவரி: கற்குளி வடக்கு, சாவகச்சேரி.

எட்டாவது அகவையில்



பெயர் :ப.மதுசலா
முகவரி: இல.8, மடம்வீதி, யாழ்ப்பாணம்.

ஒன்பதாவது அகவையில்



பெயர் :யோ.விஷ்மன்
முகவரி: துன்னாலை வடக்கு, கரவெட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:----------------

முகவரி :----------------

பிறந்த ஆண்டு:----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றார் ஒப்பம்

# புதியதோர் உலகம் செய்வோம்

உலகக்கிண்ணப் போட்டிகள் முடிவடைந்ததும் இலங்கை அணியில் பல மாற்றங்கள் எதிர்பார்க்கப்பட்டன. அதுவும்



அரசியல் வேணாமப்பா, கிரிக்கெட்டை வளக்கவேணும்

விரைவில் நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. காரணம்- சார்ஜா கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளே. இந்நிலையில், அணித்தலைவர் யார் என்பதற்கு விடை கிடைத்தது. சனத் ஜெயசூரியாவே தொடர்ந்தும் அணித்தலைவராக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும் அவர் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்ய, விளையாட்டுத்துறை அமைச்சர் அதனை ஏற்கமறுக்க, ஒருவாறு பிரச்சினை தீர்ந்ததது. இதேவேளை, அரவிந்த டீ சில்வா தெரிவுக்குழுவில் ஒரு அங்கத்தவராக இருப்பார் என்று செய்திகள் வெளிவரத் தொடங்கின. ஆனால், BCCSC இன் இடைக்காலக் குழு, அரவிந்த தெரிவுக்குழுவில் சேர்க்கப்படமாட்டார் என்று அறிவித்தது. ஆனால், மீண்டும் விளையாட்டுத்துறை அமைச்சரின் விருப்பப்படி அரவிந்த தெரிவுக்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார். தற்போது தெரிவுக்குழுவின் அங்கத்தவர் தொகை ஐந்து. கய் டீ அல்விஸ் - தலைவர், ரொஜர் விஜேசூரிய, ஆஷ்லி டீ சில்வா, லலித் களுபெரும மற்றும் அரவிந்த. அரவிந்த சேர்க்கபடமாட்டார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டமைக்கு ஒரு காரணம் கூறப்படுகின்றது.

அதாவது, அவர் நேற்றுவரை சேர்ந்து விளையாடிய வீரர்களின் தகைமையை, அவரே நிர்ணயிப்பது என்பது ஒரு சங்கடமானநிலையை உருவாக்கும் என்பதே அது. இருந்தும் அவர் தெரிவாளர்களில் ஒருவராகியுள்ளார்.

இதற்கு முன்பதாகச் சார்ஜா போட்டிகளில் விளையாடத் தெரிவு செய்யப்பட்ட அணியில் முத்தையா முரளிதரன் இல்லை என்பது ஒரு அதிர்ச்சியான செய்தி. ஆனால், முரளி இதுபற்றிச் செய்தி ஊடகங்கள் மூலம்தான் கேள்விப்பட்டதாகவும், ஆனால் தான், விளையாட மறுப்பேதும் தெரிவித்திருக்கவில்லை என்றும் எடுத்துக் காட்டியிருந்தார். இதுதவிர, முன்னைய தெரிவில் ஆர்னல்ட், சங்ககார, மஹேல போன்றோரும் அணியிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்திருந்தன. அண்மைய செய்திகளின்படி - சங்ககார மீண்டும் சார்ஜா அணிக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அதேவேளை, முரளியும் மீண்டும் அணிக்குள் சேர்க்கப்பட்டுள்ளார். அனால், தெரிவுக் குழுவினர் இந்த இருவரின் நீக்கம் பற்றிக் கருத்துக்கூறுகையில் - எதிர்வரும் நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய அணிகளுடனான போட்டிகளுக்காக ஓய்வு கொடுக்கப்பட்டிருப்பதான தோரணையில் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

எல்லாம் ஒரு குழப்பநிலையைக் காட்டுவதுபோலத் தோன்றவில்லையா. மேலும் ஆர்னல்ட், மஹேல இருவரையும்விட சங்ககார- உலகக்கிண்ணப் போட்டிகளில் நன்றாகவே செய்திருந்தார். இருந்தும் முன் இருவரின் நீக்கம்கூடத் தற்காலிகமானதாகவே கருதப்படவேண்டும் என்பது ரசிகர்களின் முடிவு. இது ஒருபுறம் இருக்க, அணியில் மிகுந்த மதிப்பும், செல்வாக்கும் பெற்று விளங்கியவர் அரவிந்த. இவருடன்கூட விளையாடிய யாரும் இவரது முடிவைத் தட்டிக்கேட்கப் போவதில்லை. ஏனெனில், அவரைப்பற்றி அணிவீரர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். இது இப்படியிருக்க, அவரைத் தவிர்க்க நியாயம் கூறுவது அவ்வளவு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகத் தெரியவில்லை. இந்தவகையில், அமைச்சரின் தலையீடு பிழையானது என்றுகூற இயலவில்லை. என்னவோ, இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் அவிழ்க்க முடியாத பல முடிச்சுகள் விழுந்திருப்பதைப்போலவே தோன்றுகிறது. இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. இப்பொழுதே அரவிந்தவின் இடத்தை நிரப்பப் போவது யார் என்று கேட்பதைவிட, அவரின் இடத்துக்கு ஆள் இல்லை என்பதே உண்மை.

இலங்கை அணியின் வளர்ச்சிக்கு மீண்டும் உரமூட்ட வேண்டியகாலம் இதுவென்றே தோன்றுகின்றது. எனவே, சகல தரப்பாரும் - பேதங்கள் இருந்தாலும்கூட, ஒன்றுபட்டுச்




செயலாற்ற வேண்டிய தருணமொன்று வந்துள்ளது. இது காலத்தின் கட்டாயம். இந்தவேளையில், களத்தில் ஒன்றாக நின்றாடிய அர்ஜுன ரணதுங்கவை மறந்துவிட இயலாது. அவர் ஒரு **Star.** அவரும் இலங்கை அணியைக் கட்டியெழுப்ப நிறையச் செய்யமுடியும். ஒரு திட்டமிட்ட




யாருக்குமே கழுத்தறுப்புச் செய்யமாட்டேன்- அரவிந்த.

வகையில் எல்லோரும் தங்கள் அனுபவங்கள், ஆற்றல் எல்லாவற்றையும் ஒன்றுகுவித்துச் செயற்பட்டே ஆகவேண்டும். ஏனெனில், எதிர்காலத்தில் இலங்கை அணியில் இடம்பிடிக்கப்போகும் நூற்றுக்கணக்கான சிறார்கள் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கரங்களைப் பற்றி உயர்த்தவேண்டியது உங்களது பாரிய பொறுப்பு.

- ஜோஸப் கிருஷ்ணா.

# ஸ்கந்தா கிண்ணம் வென்றது

**யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதிற்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நடைபெற்றுமுடிவடைந்துள்ளன. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இச்சுற்றுப் போட்டியில் சிறப்பாக விளையாடி சாம்பியன் பட்டம் வென்று, மாகாணமட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளது.**

**ஸ்கந்தவரோதயாக் கல்லூரி - நெல்லியடி மத்திய கல்லூரியுடன் கோல்கள் அற்ற சமநிலையில் ஆட்டத்தை முடித்துக் கொண்டாலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி (05-00), யாழ்.இந்துக்கல்லூரி (03-01), ஊர்காவற்துறை சென் அன்ரனீஸ் கல்லூரி (01-00) தேவரயாளி இந்துக்கல்லூரி (02-01) என்றவாறு தோல்வியுறச் செய்து, தன் திறமையை நிரூபித்துள்ளது.**




**முன் உள்ளவர் - கோல் காப்பளர் ச.ஜனாங்கணன், வலமிருந்து இடமாக- கல்லூரியின் விளையாட்டு முதல்வரும், அணியின் பயிற்றுநருமாகிய மு.நடராஜா, அணிப் பொறுப்பாசிரியர்களான T.ராஜரட்ணம், V.நந்தீஸ்வரன், அணியின் உப தலைவன் து.தர்சன், உப அதிபர் V.இலட்சுமணன், அதிபர் K.சிவாஜி, அணித் தலைவர் ஜெ.ஜெயகிருஸ்ணன், அணியின் போசகர் ஆறு.திருமுருகன், கல்லூரி பகுதித் தலைவர் R.ஜோர்ஜ், அணிப் பொறுப்பாசிரியர் பா.மகாலிங்கசிவம், மேல் வரிசையில் வலமிருந்து இடமாக - ந.தனஷ்ரன், மு.ஜதீஸ்வரன், த.சந்திரசேகரன், ச.யசிதரன், ப.கமலதாஸ், ச.தமயந்தன், ச.மயீபன், ப.கஜேந்திரன், கு.பிரதீஸன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.**

# சினிமா + கிரிக்கெட் = ?

இறுதியாக 1983 ஆம் ஆண்டு உலகக்கோப்பைப் போட்டியில் இறுதி ஆட்டத்துக்கு வந்த இந்திய அணியிடம், மேற்கிந்தியத் தீவுகள் அணி அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்தது. அப்போதைய இந்திய அணித்தலைவர் கபில்தேவ். அந்த அணியிலிருந்த வீரர்கள் எல்லோரும் இளம் வீரர்கள். அந்த நாட்களில்கூட இந்த வீரர்கள் இளம் நடிக்கைகளுடன் கிசுகிசுக்கப்பட்டவர்கள். அவர்களில் இந்திய அணித்தலைவராக இருந்த ரவிசாஸ்திரி சகலகலாவல்லவர். பல இளம் ஹிந்தி நடிகைகளுடன் கிசுகிசுக்கப்பட்டவர். இப்போது பிரபல வர்ணனையாளராக இருக்கும். இவா கண்கள்- கமரா, **T.V** ஊடாக **Pavilion** இல் இருக்கும் இளம் பெண்களை மேய்வதனைக் கிரிக்கெட் போட்டிகளில் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்றும் உலகக் கோப்பைப் போட்டிகளில் ஓரளவு நன்றாக ஆடி, இறுதிப்போட்டிக்கு வந்த இந்திய அணியைப் பாராட்டமல் இருக்க முடியாது. ஆரம்பத்தில் செருப்புக்களாலும், கற்களாலும் விழுந்த அபிஷேக ஆராதனைகள், கடைசியில் இந்திய அணியின் மேல் பூக்களாக விழுந்ததை மறுக்கமுடியாது. அணித் தலைவர் கங்கூலி **TOSS** இல் வென்று, ஏன் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் **FIELDING** எடுத்தார் என்பது கங்கூலிக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். ஆரம்பத்தில் அவர் கொடுத்த பேட்டிகளில் எல்லாம் "அவுஸ்திரேலியாவை வெல்லும் திறன் எங்களிடம் மட்டுமே யுள்ளது" என்றெல்லாம்



ஹய்யா. சம்பள உயர்வு கிடைச்சாச்சா...

கூறினார். ஆனால், இறுதியாகப் பரிதாபமான தோல்வியைத் தழுவிய அவர், **AIR INDIA** இல் ஏறியது இன்றும் மறக்கமுடியாத ஒரு காட்சி. ஒன்றை மட்டும் மறுக்கமுடியாது. என்னவென்றால், உலகிலேயே பெண் கிரிக்கெட் ரசிகைகள் அதிகமாகக்கொண்ட அணி இந்திய அணிதான். ஆனால் - இந்த அணி கிரிக்கெட்டினை மீறிப் பெண் ரசிகைகள் பக்கம் சாய்வது கவலைக்குரியது. இப்போதுதான் 2003 உலகக் கோப்பைப் போட்டியில் தோற்ற மனக்கவலை ஆறிக்கொண்டு வருகின்ற இந்த நேரத்தில், "2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறுகின்ற உலகக்கோப்பைப் போட்டிகளில் இந்திய அணி நிச்சயம் வெல்லும்" இது கங்கூலியின் கூற்று. இந்தய அணி **Final** போட்டியில் தோற்றாலும், அவர்களுக்கு ஜாக்பட் பரிசு கிடைத்திருக்கின்றது. இந்திய வீரர்களுக்குத் தொடர்மாடி வீடுகளும், சில பணப்பரிசில்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை வழங்கியவர்கள் இந்தியாவின் பிரபல நடிக, நடிகையர்கள். நடிகர்களுக்கும், கிரிக்கெட் வீரர்களுக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதுபோலும். இல்லாவிட்டால், ஏன் இப்படி? **IT'S HOLLY WOOD CRICKET!**

P.N.சுதர்சன்.

# ராசியில்லாத ராஜாக்கள்

உலகக்கிண்ணப் போட்டிகள் முடிந்துள்ளநிலையில், இனித்தொடர்ந்து நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டிகள் தொடர்பான முனைப்பான செயற்பாடுகள் ஆரம்பித்துவிட்டன. சேர்த்தல், கழித்தல் முதன்மைநிலை பெற்றுள்ளன. இவற்றுள்ளும் சில சுவையானவையாகவுள்ளன. தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஷோண் பொலொக் நீக்கப்பட்டதும், இருபத்திரண்டே வயதான கிரேம் ஸ்மித் அணித்தலைவராகக்கப்பட்டதும் ஆச்சரியத்துடன் நோக்கப்பட்டன. ஏனெனில், உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட முதன்மைப் பதினைந்து பேரில், இவர் பெயர் இருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து இன்னொரு செய்தி. இதுவரைகாலமும் அணியின் உபதலைவர் பதவியில் இருந்த மார்க் பௌச்சர்- அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். மேலும் அந்தப் பதவிநிலை உடனடியாக நிரப்பப்படப்போவதுமில்லை. பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தின் போக்கிலேயே உபதலைவர் ஒருவரைத் தீர்மானிக்கப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சார்ஜா போட்டிகளுக்குச் செல்லும்போது பயிற்றுநர் ஒருவர் இல்லாமலேயே செல்லப்போகின்றது. ஏனெனில், கென்யப் பயிற்றுநர் சந்தீப் பட்டீல் ஏற்கனவே இந்தியா திரும்பிவிட்டார். இதனால், ஐக்கிய அரபு எமிரேட்சின் பயிற்றுநராக இருக்கும் முன்னாள் இந்திய டெஸ்ட் வீரர் அபித் அலியின் சேவையைக் கென்ய அணி நாடிநிற்கிறது. கென்ய அணியின் வளர்ச்சியில் அபித் அலியின் பங்கும் இருக்கப்போவது சுவாரஸ்யம்தான்.

இலங்கையைப் பொறுத்தவரை குழப்பங்கள் அதிகம். விளையாட்டுத்துறை அமைச்சர்-தான் எதைச் செய்தாலும் அதில் பிழை கண்டு பிடித்துக்கொண்டே இருக்கிறார் என்ற வகையில் - மிக அண்மைச் சம்பவம் அரவிந்த தெரிவாளராக்கப்பட்டதுடன், இரண்டாக இருந்த தெரிவாளர்சபை ஐந்தாக மாற்றப் பட்டது. இருவராக இருந்து தெரிவுசெய்த சார்ஜா கிண்ண அணிக்கு அங்கீகாரம் கொடுக்க மறுத்தது - மனம் கசந்து தன் பதவியிலிருந்து வெளியேறியுள்ளார் தெரிவிக்குழுத் தலைவர் கேய் டீ அல்விஸ். இனி தெரிவாளர் சபையின் தலைவர் யார் என்பது புரியவில்லை. துலிப் மெண்டிஸ் வரலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இதேவேளை - முன்னர்

ஒவ்வொரு ஆட்டத்திற்கும் ஒவ்வொரு உபதலைவர் நியமிக்கப்பட்டு, பின்னர் நிரந்தர உபதலைவர் ஒருவர் அவர்களில் இருநது தெரிவுசெய்யப்படும் முன் முயறசி ஒன்று எடுக்கப்படும்போலவும் தெரிகிறது.

இது ஒருபுறமிருக்க, எல்லோர் மனங்களையும் கவர்ந்த கென்ய அணி - அணியில் சேர்க்கப்படாதிருந்த சங்ககார- ஒரு துடுப்பாட்ட வீரராக அணியில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். (பிரசன்ன ஜயவர்த்தன விக்கெட் காப்பாளர்). இதனை எதிர்த்து மொரட்டுவ வாழ் மக்கள், தம் மண்ணின் மைந்தனான களுவிதாரனவை உள்ளே எடு. சங்கஹாரவை வெளியேற்று என்று மொரட்டுவையில் ஒரு ஆர்ப்பாட்டம். களுவை எடு என்று போராடலாம். **OK**. ஆனால், சங்ககாரவை வெளியேற்று என்று கோஷ மிடுவது என்ன நியாயம்?

இதற்கிடையில் சார்ஜா கிண்ணத்தின் பின், தலைமைப் பதவியிலிருந்து நீங்கிக் கொள்ள விரும்புவதாகச் சனத் தெரிவித்திருப்பதாக அரசல்புரசலாகச் செய்திகள் வெளிப்பட்டிருக்கின்றன. ஆனால், தெரிவுச்சபையின் உறுப்பினர் ஒருவர் புதியதொரு தலைவரை உருவாக்கும்வரை, சனத்தைப் பொறுத்துக்கொள்ளுமாறு கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது. மஹேல ஜயவர்த்தன அடுத்த அணித் தலைவராக உருவாகும் சாத்தியம் இருந்தும், உலகக்கிண்ணப் போட்டிகளில் படுபாதாளத்தில் வீழ்ந்தமை அடுத்த தலைமைப் பதவி பற்றிய எண்ணத்தில் சறுக்கல்களை ஏற்படுத்தியுள்ளதுபோலத் தெரிகின்றது.



என்னுடைய கதி இப்படி. பௌச்சர் கதி அப்படி - ஷோண் பொலொக்

ஆனால், ரசிகர்கள் எல்லோரது அபிப்பிராயமும் அரவிந்தவின் அபிப்பிராயம் போன்றதே. அதாவது, மஹேலவின் தாழ்ச்சி மிகமிகத் தற்காலிகமானது. இவர் இன்னமும் பத்து வருடங்களுக்கு இலங்கையின் கிரிக்கெட் வீரராகத் திகழப் போகிறார். இப்போது தேவை - அவருக்கு ஓய்வு. அவர் மனரீதியில் தைரியம் பெறவேண்டும். அதுவே தேவை என்கின்றார் அரவிந்த. மஹேலவைப் பொறுதது இன்னொரு நல்ல செய்தி - அவர் ஒரு புற்று நோய் வைத்தியசாலையை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும், அது தொடர்பில் நிறைய நேரம் செலவழிப்பதாகவும் செய்திகள் வருகின்றன. இது சுவாரஸ்யமான செய்தியா? உணர்வுடன் கலந்த செய்தியா? நிச்சயம் இரண்டாவது விடயம்தான். ஆனால், கிரிக்கெட் சாதனைகள் பதியப்படும். மஹேல செய்யப்போவது சிரஞ்சீவியாக வாழும். மனிதனை வாழ வைக்கும்.

~ நிர்மலன் ~

# அதோ தெரிகிறது ஒலிம்பிக்ஸ்

நீண்ட தூர ஓட்ட வீரர்கள் என்றால் உடனே ஞாபகம் வருவது ஆபிரிக்க நாடுகள் தான். அதிலும் கென்யா, எத்தியோப்பியா என்பன முதலில் ஞாபகத்துக்கு வரும்.




கறுப்புத்தாங்க எப்பவும் **FIRST.**

அந்தவகையில், எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்த கெனனிஸா பிக்கேலே புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார். உலக **CROSS COUNTRY** சாம்பியன்ஷிப் போட்டிகளில் எட்டுக் கிலோமீற்றர் மற்றும் பன்னிரண்டு கிலோமீற்றர் போட்டிகளில் இரண்டாவது முறையாக முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார் என்றும், பெருமைக்குரிய நீண்டதூர ஓட்ட வீரர் ஹெய்லி ஜெப்ரசெலாஸிகூட இத்தகைய சாதனையைப் புரிய இயலவில்லை. இந்த இருபது வயது இளைஞருக்குப் போட்டியாக இருந்தவர்கள் ஐந்து கென்ய வீரர்களாவர். ஆனால், ஒவ்வொரு சுற்றிலும் ஒவ்வொரு கென்ய வீரனாகப் பின்தள்ளி, இறுதிச் சுற்றில் கென்யாவின் பட்ரிக் இவூட்டியை வேகமான **DASH** மூலம் பின்தள்ளி முதலிடம் பெற்றுக்கொண்டுள்ளார். இந்தப் பன்னிரண்டு கிலோமீற்றர் தூரத்தைக் கடக்கஇவர் எடுத்துக்கொண்ட நேரம் 35 நிமிடமும் 56 செக்கன்களுமாகும். இதேவேளை, மூன்றாம் இடத்தை எத்தியோப்பியாவைச் சேர்ந்த, கடந்த வருட **JUNIOR** சாம்பியனான ஜி.ஜி.கொசியாபர் பெற்றுக்கொண்டுள்ளார். பட்ரிக் இவூட்டி கருத்துக் கூறும்போது-தாங்கள் ஒரு கூட்டமாக அழுத்தம் கொடுத்தும், அவரது வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை என்று கூறியுள்ளார். இதேவேளை, பிக்கேலே கருத்துக்கூறும்போது-தான் இனி 5000 மீற்றர் மற்றும் 10,000 மீற்றர் ஓட்டங்களிலும் கவனம் செலுத்தப் போவதாகக் கூறியுள்ளார். ஆனால், தடங்களில் ஓடிப் பழக்கம் இல்லை. அதிலுள்ள நுட்பங்களையும் பழகிக்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார். உண்மையில் ஒரே இரவில், பிக்கேலே தடகள உலகில் எல்லோராலும் அறியப்பட்டவராகிவிட்டார். கிரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இவரது பெயர் பரபரப்பாகவே பேசப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

- பார்த்தீபன்.

# போதுமடா சாமி

இலங்கை அணியின் பயிற்றுநர் வாட்மோரின் பதவிக்காலம் மே மாதத்துடன் முடிவடைகிறது. ஆனால், இது நீடிக்கப்படுமா, இல்லையா என்பதற்குரிய விடை கிடைத்துவிட்டது. இப்பொழுது சார்ஜாக் கிண்ணப் போட்டிகளுக்கும், அதைத் தொடர்ந்து வரும் நியூசிலாந்து சுற்றுப் போட்டிகளுக்கு மட்டுமே அவர் பயிற்றுநராக இருப்பார் என்றும், அதன்பின் புதியவர் ஒருவர் வருவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. **BCCSL** கருத்துக் கூறுகையில்- இலங்கை அணிக்கு நவீன சிந்தனைகள் புகுத்தப்படுதல் அவசியமாகவுள்ளது என்று கூறியுள்ளார்கள். இலங்கையில் பிறந்த வாட்மோர்- அவுஸ்திரேலியப் பிரஜை. 1996 இல் உலகக்கிண்ண வெற்றிக்குச் சூத்திரதாரி. இருந்தும், இவர் நீண்டகாலம் இலங்கை அணியின் பயிற்றுநராக இருந்தது சுட்டிக்காட்டப்பட்டு, வேறு வகையாகச் சிந்திக்கத் தலைப்பட்டிருப்பது தெரிகிறது. இதேவேளை, இலங்கை அணியின் வைத்தியர் அலெக்ஸ் கொன்டூரியும் மாற்றப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல, பக்கத்து வீட்டிலும் சலசலப்பு. இந்தியப் பயிற்றுநர் ஜோண் ரைட்டின் பதவிக்காலம் உலகக்கிண்ணப் போட்டிகளின் முடிவோடு முடிவுக்கு வருகிறது. ஆனால், பங்ளாதேஷில் நடைபெறவுள்ள முக்கோணக் கிரிக்கெட் போட்டிகள் முடிவடையும்வரை அவரது பதவிக்காலம் இன்னும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வைத்தியர் அன்ரூ லீப்பஸ மற்றும் அட்ரியன் லெ ரூ ஆகியோர் பற்றி இந்திய அணி எந்த முடிவெடுத்துள்ளது என்று தெரியவில்லை.



ஒருதரம் சொல்லுங்கோ, நூறுதரம் செய்தோம்!

பொதுவாக உலகக்கிண்ணச் சுற்றுப்போட்டியில், கிண்ணத்தை வெல்லாத எல்லா அணிகளுக்கும் குறிப்பாக, டெஸ்ட் நாடுகளுக்கு ஒரேபிரச்சினைகள்தான். அதற்கு இலங்கையும், இந்தியாவும் மட்டும் விதிவிலக்கல்ல. இந்திய - இலங்கை வீரர்கள், பயிற்றுநர்கள் யாரும் விதிவிலக்கல்ல. ஆகவே மாற்றங்களை- ரசிகர்களும் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதுதான். இன்னும் நான்கு வருடங்களில் மீண்டும் உலகக்கிண்ணச் சுற்றுப்போட்டிகள். அதற்கிடையில் எத்தனையோ ஒருநாள் போட்டிகள், டெஸ்ட் தொடர்கள். இவற்றிலெல்லாம் தாங்களே வென்றுவிட வேண்டுமென்றுதான் இத்தனை அட்டகாசம். சரி இப்படியான நடைமுறைகள் மூலமாவது, இன்னும் குறைந்தது இரண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்காவது மாற்றம் என்று அவலப்படாது, அமைதியாக இருக்க முடியுமா? அந்தச் சாதனையை நிகழ்த்த முடியுமா? அவுஸ்திரேலியா அதனைத்தானே செய்திருக்கிறது.

- நர்மதா -

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

தேறக்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்

- திருக்குறள்.

# நமது நோக்கு

## தவறான நடவடிக்கை !

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக - அந்நாடுகளின் பிரதிநிதிகளையும், சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களையும் வொஷிங்ரனுக்கு அழைத்துள்ள அமெரிக்கா - இலங்கையில் மேற்கொள்ளப்படவிருக்கும் எந்தவொரு பாரிய அபிவிருத்தித் திட்டத்திற்கும் முக்கிய காரணியாகவும் - வட - கிழக்குப் பகுதியில் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களின் பிரதான - அதிமுக்கிய பங்கேற்பாளராகவும் விளங்கும் விடுதலைப் புலிகளை அழைக்காமல் மாநாடொன்றை நடாத்தத் தீர்மானித்திருக்கிறது.

இது - எந்த நோக்கத்திற்காக உதவி வழங்கும் மாநாடு கூட்டப்படப்போகின்றதோ - அந்த நோக்கத்தைக் கருத்திலெடுக்காமல் - மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகவே வெளிப்படுகின்றது.

அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே இணக்கம் காணப்பட்டபடி - சர்வதேசமும் அதனை ஏற்றுக்கொண்டபடி - போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் வட - கிழக்குப் பகுதியில், முன்னெடுக்கப்படும் எந்தவொரு புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டமும் - விடுதலைப் புலிகளின் பங்கேற்புடன், ஆலோசனையுடனேயே செயற்படுத்தப்படும் என்ற உறுதியான தீர்மானமொன்று ஏற்கனவே நடைமுறையிலிருக்கிறது.

இதன் பிரகாரமே - சமாதானப் பேச்சுக்களில் ஆராயப்பட்டதன்படி வட - கிழக்கில் உடனடி மனிதாபிமான, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான உப குழுவும் (சிறான்) அமைக்கப்பட்டது.

சிறானின் ஊடாகவே - இனி எந்தவொரு பணிகளும் நடைமுறைப்படுத்தப்படும் என்ற அடிப்படையில் - சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களதும், நாடுகளதும் - அமைச்சர்கள், உயரதிகாரிகள், பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு வந்து - விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி - வட - கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதில் தமது பங்களிப்புப் பற்றி விரிவாகப் பேசிச்செல்கின்றனர்.

அதேவேளை - அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களிலும், நோர்வேயில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் - விடுதலைப் புலிகள் அதிகாரபூர்வமாகப் பங்கேற்க அழைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் பங்கேற்பின் அடிப்படையிலேயே - அவர்களது சமாதான உறுதிப்பாட்டின் பேரிலேயே - இலங்கைக்கான நிதியுதவிகள் அங்கு தீர்மானிக்கப்பட்டன.

இதனை - நோர்வே அரசாங்கம் மட்டுமல்ல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் - ஏன், அண்மையில் ஜப்பானில் நடத்தப்பட்ட பேச்சுக்களில், அந்நாட்டு விசேட தூதுவர் யசுஷி அகாஷியும் கூட ஒத்துக்கொண்டிருந்தனர்.

அத்துடன் - ஜப்பானில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெற விருக்கும் உதவி வழங்கும் மாநாட்டிற்கான ஏற்பாடுகளிலும் - அங்கு ஆராயப்படவிருக்கின்ற திட்டங்கள் பற்றிய அனைத்துச் செயற்பாடுகளிலும் விடுதலைப் புலிகள் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் பங்கேற்று வந்த நிலையில் - அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு - விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல - அமைதியை நாடும் சகலருக்குமே அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளித்திருக்கிறது.

புனரமைப்புப் - புனர்வாழ்வுப் பணிகளில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமமான பங்களிப்புச் செய்வதாக உடன்பாடு காணப்பட்டிருக்கின்றபோது - அந்த உடன்பாட்டை கௌரவிக்காத தன்மையை அமெரிக்காவின் போக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

வொஷிங்ரன் மாநாட்டுக்கு விடுதலைப் புலிகளை அழைக்காத அமெரிக்காவின் முடிவு - புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளில் எவ்வகையிலும் முன்னேற்றத்தைத் தந்துவிடப்போவதில்லை - மாறாக, முக்கிய பங்கேற்பாளரான விடுதலைப் புலிகளின் பங்களிப்பின்றி மேற்கொள்ளப்படும் எந்த முடிவுகளும் - நடைமுறைச் சாத்தியமற்றதாகவே இருக்கும்.

இந்தவகையில், ஒருதலைப்பட்சமான, பாரபட்சமிக்க அமெரிக்காவின் நடவடிக்கை - புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளின் முன்னேற்றத்தில் தங்கி நிற்கின்ற அமைதி முயற்சிகளினதும் - மக்களது சுமுக வாழ்விற்கும் பின்னடைவைத் தருகின்ற ஒன்றாகவே மாறிவிட்டிருக்கிறது.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் அமைதி முயற்சிகள் கட்டங்கட்டமாக கட்டியெழுப்பப்பட்டு வருகின்றபோது - அதற்குப் போதிய கவனந்தராமல் - தவறுகளும், முரண்பாடுகளும் நிறைந்த தனது பழைய பார்வையை மாற்றிக்கொள்ளாமல் அமெரிக்கா செயற்பட முனையுமானால் -

தான் சார்ந்த, தனக்கு ஆதாயமான அரசியலுக்காக - இலங்கையில் நடைபெறும் அமைதி முயற்சிகளைக் கையாள அமெரிக்கா நினைக்குமானால் -

அது, இலங்கைத்தீவில் ஆக்கபூர்வமான அமைதி முயற்சிகளுக்கு எவ்விதத்திலும் பயன்தராது என்பதை அமெரிக்கா கவனத்திற்கொள்ள வேண்டும்.

# புலிகளின் அரசியல் விவகாரக்குழு இன்று ஆலன்ட் தீவுக்கு விஜயம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர் இன்று பின்லாந்திலுள்ள சுயாட்சிபெற்ற தீவான ஆலன்ட்டுக்கு (Aaland) விஜயம்செய்யவுள்ளனர்.

பின்லாந்தின் சுயாட்சிபெற்ற மாகாணமான ஆலன்ட்டிற்குப் புலிகள் விஜயம்செய்யவுள்ளமை குறித்து கருத்து தெரிவித்த அப்பிரதேசத்தின் உயர் அரச அதிகாரியான எலிசபெத் நொக்கிலியர்,

புலிகள் - ஆலட்ண்டில் சுயாட்சி எவ்வாறு உருவாக்கப்பட்டது என்று நேரடியாக ஆராயவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆலன்ட்தீவுகளில் தனியான பொலிஸ்படை உள்ளது. அத்துடன், தனியான அபிவிருத்திக் கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இவை பற்றிப் புலிகளுக்குத் தாம் விரிவாக எடுத்துக் கூறவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

போல்டிக் கடலின் மத்தியில் ஆலன்ட் அமைந்துள்ளது. இது முன்னர் சமஷ்டி ஆதிக்கத்தின் கீழும், பின்னர் ரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழும், இறுதியாக போலந்தின் நிர்வாகத்தின் கீழும் இருந்தது.

கிழக்கு - மேற்கு ஐரோப்பாவுக்கு இடையில் அமைந்திருப்பதால், இது மிக முக்கியமான தீவாக இருக்கிறது. இங்கு பல போர்கள் நிகழ்ந்துள்ளன. 200 வருடகால அந்நிய ஆக்கிரமிப்புக்களுக்குப் பின்னர் அங்கு சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது.

இங்கு செல்லும் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர் - சுயாட்சி அமைப்பு முறை, கல்விமுறை, சுகாதார நடைமுறைகள் குறித்து ஆராயவுள்ளதுடன், ஆலன்ட் அமைதி நிறுவகத்தின் சுயாட்சி பற்றிய கொள்கைகள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

# சிங்களப் பயணிகளுக்கு முகமாலையில் சோதனைக் கெடுபிடிகள் இல்லை!

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் சிங்கள மக்கள் - முகமாலை சோதனைச் சாவடியில் எந்தவிதப் பதிவுகளோ, சோதனைகளோ இல்லாது, பயணத்தைத் தொடரப் படைத்தரப்பு அனுமதி வழங்குவதாகத் தெரிய வருகிறது.

முகமாலைச் சோதனைச் சாவடியினூடாக வாகனங்களில் வருவோர், தமது பெயர்விபரங்களைப் பதிந்து, உடற் சோதனையின் பின்னரே குடாநாட்டுக்குள் பிரவேசிக்கமுடியும்.

ஆனால், தென்பகுதியிலிருந்து வரும் சிங்கள மக்கள் மட்டும், எந்தச் சோதனைகளும் இன்றிப் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகிறது. தம்முடன்கூடவரும் சிங்களப் பயணிகளுக்கு மட்டும் இந்தச் சிறப்புச் சலுகை வழங்குவது குறித்து, ஏனைய பயணிகள் விசனம் தெரிவிப்பதையும் காண முடிகின்றது.

### கண்காணிப்புக்குழுவுக்கு

# கூடுதல் அதிகாரங்களை வழங்கி பிரச்சினைகளைத் தீர்க்கலாம்!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)



விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கப் படைகளுக்கும் இடையில் போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் கண்காணிப்புக்குழுவின் அதிகாரங்களை வலுப்படுத்தவேண்டும் என்றும், இதன்மூலம் பிரச்சினைகள் ஏற்படுவதைக் குறைக்க முடியும் என்றும் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கடற்பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து விசாரிப்பதில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கிறது.

எனவே - இந்த விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தி, கண்காணிப்புக்குழுவுக்கு அதிகாரங்களை வழங்குவதன்மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம் கட்சிகள் இணைந்து தேர்தலில் போட்டியிட முயற்சி

## ஃபேரியல் அஷ்ரப் தகவல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுமாயின், முஸ்லிம் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாது, முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடும் என ஃபேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இவ்வொன்றிணைந்த அரசியல் வேலைத் திட்டத்திற்காக நாளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி மற்றும் அஷ்ரப் காங்கிரஸ் ஆகிய கட்சிகளை ஒன்றிணைத்து, பொதுவேட்பாளர் பட்டியலைத் தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான பூர்வாங்க வேலைத்திட்டங்களை வடக்கு-கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்னணி மேற்கொண்டு வருகின்றது எனவும் பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

இதேவேளை -

உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து போட்டியிட தேசிய ஐக்கிய முன்னணியும், அஷ்ரப் காங்கிரஸும் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், இந்தக் கூட்டணி தொடர்பாகப் பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பயணப் பருவகாலச் சீட்டுக்கள் பெறுவதற்கு

# அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யாததால் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் பாதிப்பு

(துன்னாலை)

இலங்கையிலுள்ள அனைத்து உயர் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்களினது உண்மையான பயணச்செலவின் 30 வீதத்தினை மட்டும் செலுத்தி, பஸ் பிரயாணத்திற்கான பருவகாலச் சீட்டுப் பெறும் நடைமுறை இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்பத் தலைமை நிர்வாகம், மாதாந்தம் 3 ஆம் நிலைக் கல்வியமைச்சின் அங்கீகாரத்துடன் - உயர்கல்வி அமைச்சு, திறைசேரியிலிருந்து இலங்கையிலுள்ள அனைத்து உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களினதும் பயணச்செலவுக்காக மிகுதி 70 வீதப் பணத்தைச் செலுத்தி வந்தது. மாதம் ஒன்றிற்கு 80 இலட்சம் ரூபா நிதி, இவ்வாறு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஒதுக்கப்பட்டுவந்தது.

எனினும், இவ்வாண்டு முதல் இந்நிதிஒதுக்கீட்டை அரசாங்கம் நிறுத்தியுள்ளதால், இலங்கை முழுவதுமுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி பயிலும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (12)

# இலங்கைக்கான நிதியுதவிகள் குறித்து உலகவங்கி பணிப்பாளர்கள் ஆலோசனை

(கொழும்பு)

அடுத்த நான்கு வருடங்களுக்கு இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கான திட்டங்கள் குறித்து உலக வங்கியின் பணிப்பாளர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர்.

'இலங்கையை மீட்டெடுத்தல்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலின்போது, அடுத்த நான்கு வருடங்களில் இலங்கைக்கு 80 கோடி அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குவது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

உலகவங்கி வருடாந்தம் இலங்கைக்கு வழங்கிவரும் ஆறு கோடி டொலர் நிதியுதவிக்கு மேலதிகமாகவே இந்தப் பாரிய நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரத்தை உறுதியாகக் கட்டியெழுப்புவதற்கும், வட- கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படை வசதிகளைக் கட்டமைப்புச் செய்வதற்கும், புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும், மீள் குடியமர்வு நடவடிக்கைகளுக்கும் உலக வங்கியின் நிதியுதவிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

# சர்வஜன வாக்கெடுப்பு பற்றிய அறிவிப்பு

## அரசாங்கத்தின் பிரசார உத்தியா?

**தெற்குத் திசையினிலே**

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வுகள், ஒரு நாட்டின் அரசியலை மாற்றும் சக்தியைக் கொண்டுள்ளன. பொருளாதார வளர்ச்சி காணப்படும்போது, ஒரு நாட்டின் அரசாங்கம் தமது கட்சி நோக்கங்களை அல்லது அரசியல் நோக்கங்களை இலகுவில் அடைந்துகொள்ள முடிகிறது. எனினும், இதற்கு மாறாகப் பொருளாதார வீழ்ச்சிநிலை காணப்படும்போது, அரசாங்கம் எந்த ஒரு முன்னெடுப்பை மேற்கொண்டாலும் அதனைச் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.



சரத் அமுனுகம

இலங்கையின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் இதேநிலையைத்தான் ஒத்திருக்கிறது. ஜே.ஆர். ஜயவர்த்தன மற்றும் ரணசிங்க பிரேமதாஸ காலத்துடன் ஒப்பிடுகையில், இன்றைய ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மிகவும் நெருக்குதலுக்கு முகங்கொடுத்துள்ளது என்றாலும், அன்றுமுதலே வெளிநாடுகளின் ஆதரவு ஐக்கிய தேசிய கட்சிக்கு இருந்து வருவதால், சமாளிக்கும் தன்மையில் திருப்தி காணப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைக் காட்டிலும், ஐக்கிய தேசியக் கட்சி-வெளிநாட்டு அரசாங்கங்களின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு செயற்படுவதன் காரணமாக, அந்தக் கட்சி ஆட்சிபீடம் ஏறும்போது, குறிப்பாக முதலாளித்துவ நாடுகள் பெரிதும் உதவி வருகின்றன. மாற்றுக் கருத்தாக - இலங்கையின் இறைமை முன்வைக்கப்பட்டாலும், இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் தேசியப்பற்று இன்னமும் அவர்களைப் பெரிதும் பாதிக்காததன் காரணமாக, நாட்டின் இறைமை பாதிக்கப்படுவதை அவர்கள் பெரிதுபடுத்துவதில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆட்சிப்பொறுப்பை மக்கள் ஒரு மாற்றம் கருதி வழங்கினாலும்கூட, சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்திற்குப் பின்னர் சுதந்திரக் கட்சி அதனைத் தக்கவைத்துக் கொள்வதில் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகிறது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்தநிலையில் இருந்து சற்று மாறுபட்ட கோணத் தைக் கொண்டிருந்தாலும், யுத்தம் சம்பந்தமான கொள்கை அவரின் ஆட்சியை முடிவுறுத்துவதற்கு வழி வகுத்தது. இன்று பல ஆட்சி மாற்றங்களின் பின்னர், தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முன்னெடுப்பு முழுமூச்சாக மேற்கொள்ளப்படுகிறது என எடுத்துக்கொண்டாலும், இன்னமும் எந்த ஒரு கட்சியும் தமது தீவிர பங்கேற்றலை, இந்தத் தீர்வு விடயத்தில் காட்டவில்லை என்றே கூறவேண்டும்.

இனப்பிரச்சினை தீரவேண்டும் என்பது நாட்டின் பொருளாதாரத்துடன் இணைத்துப் பேசப்பட்டாலும், சொந்தக் கட்சி நலனே அதிகமாக இருந்திருப்பதை நாம் காணலாம். தொடர்ந்தும் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற உந்தலின் அடிப்படையிலேயே இனப் பிரச்சினைத் தீர்வு முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டமையால், அதன் தூரநோக்குப் பாதிக்கப்பட்டது. தீர்வு ஒன்று பிரேரிக்கப்பட்டாலும் கூட - அதற்குள் தமது கட்சி நலன், அரசியல் என்பவற்றைப் புகுத்தி வந்துள்ளமையால், இதுவரை காலமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்னெடுப்புக்கள் வெற்றிபெறவில்லை.

இன்றைய நடைமுறைத் தீர்வு முன்னெடுப்பு சற்று வித்தியாசமான கோணத்தில் சென்றாலும், அதிலும் அரசியல் நோக்கும் கலந்திருப்பதை மறக்கமுடியாது. இதிலொரு அம்சம்தான் - அரசாங்கம் தற்சமயம் முன்வைத்துள்ள சர்வஜன வாக்கெடுப்பு அறிவித்தலாகும். இனப்பிரச்சினைத் தீர்வு முன்னெடுப்புக்கள் இடம்பெறுகின்றன, இரண்டு தரப்பினரும் பல கஷ்டங்களுக்கு மத்தியில் சில இணக்கங்களை எட்டியுள்ளனர், அவையும்கூட சிலவேளைகளில் இணக்கங்களாக மாத்திரமே இருந்து வருகின்றன, நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலையை அந்த இணக்கங்கள் கொண்டுள்ளன. இந்தநிலையில் அரசாங்கத்தின் புதிய நிலைப்பாடு புதிராக முன்வைக்கப்பட்டுள்ளது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை. சமஷ்டியை ஒரு தீர்வாகக் கொள்ளலாம் என்ற அடிப்படை இணக்கம் ஏற்பட்டிருந்தாலும்கூட - அதிலும் நிறைந்த அதிகாரம்கொண்ட சமஷ்டியா? அல்லது திருப்தி கொள்ள வைக்கக்கூடிய சமஷ்டியா? தீர்வாக அமையவேண்டும் என்பதில் முரண்பட்ட கொள்கையை அரசும் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் - சர்வஜன வாக்கெடுப்பு என்றவிடயம் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டமைக்குக் காரணங்கள் இருக்கலாம் என அரச தரப்பில் கூறப்படுகின்றது. ஜனாதிபதியும், அவரின் கட்சியினரும் - எதிர்வரும் ஜூன் மாதமளவில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும் யோசனையைக் கொண்டுள்ளனர். எனினும், இதனை முந்திக்கொண்டு சர்வஜன வாக்கெடுப்பைக் கோருவது என ஐக்கிய தேசியக்கட்சி முனைந்திருக்கிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகச் சர்வஜன வாக்கெடுப்பு என்பதைக் காட்டிலும், தமக்கு வாக்களித்தவர்களின் நம்பிக்கையைப் பரீட்சிக்கும் ஒரு களமாகவே அரசாங்கம் இந்த சர்வஜன வாக்கெடுப்பினைக் கருதுகிறது. அதாவது, வாக்குறுதிகளின் மத்தியில் மீண்டும் மக்கள் தம்மை அங்கீகரிப்பார்களா? என்பதே அதன் நோக்காகும்.

மறுபுறத்தில் பிரதான நோக்க்மாக, ஜனாதிபதியின் முன்னெடுப்பு ஒன்றை முறியடிக்கும் செயற்பாடாகவும் இது அமைந்திருக்கிறது. பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்வரும் ஜூன் மாதமளவில் நடத்துவதற்கு ஜனாதிபதி முயன்று வருகிறார். இதற்குத் துணையாக அவர், மக்கள் விடுதலை முன்னணியை இணைத்துக்கொள்ள முயற்சிக்கிறார். பொருளாதார மற்றும் இனவாத அடிப்படையில் சிங்கள மக்களின் ஆதரவு தற்சமயம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் குறைவு என்ற எடுகோளின் அடிப்படையில், ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நோக்கிக் காய்களை நகர்த்தி வருகிறார்.

இன்றைய நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி அதற்குத் தயாரில்லை. அப்படியானால், ஏன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை வரவேற்கவேண்டும் என்ற கேள்வி எழுகின்றது, இதை ஆராய்ந்து பார்க்கும்போது, ஒரு பிரசார உத்தி என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

அதாவது, அரசியல் ரீதியில் ஜனாதிபதியின் பொதுத்தேர்தல் கொள்கையைத் தகர்ப்பதே இதன் பிரதான நோக்காகும் என அரசுக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன. சமாதானம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டுமானால், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்திருக்கவேண்டும். அன்று ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பிரதமர் முன்வைத்த கொள்கைகளுக்கு, மக்கள் அங்கீகாரத்தை வழங்கியிருந்தனர். அந்த அங்கீகாரத்தைக்கொண்டே இன்று பிரதமமந்திரியினால் சமாதான நகர்வு ஒன்று முன்னெடுக்கப்படுகிறது. இந்தநிலையில், சமாதான நகர்வில் எந்தவிதக் குறிப்பிடத்தக்க மாற்றங்களுமின்றி, போர் ஓய்வு ஒன்றை மாத்திரம் காரணம் காட்டி, சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்வது விளங்கிக்கொள்ள முடியாத செயற்பாடாகும்.

எனவே, இது ஒரு அரசியல் பதிலடி நடவடிக்கை என்று மட்டுமே கூறமுடியும். மறுபுறத்தில், சமாதானப் பேச்சுவார்த்தையின் பங்காளரான - தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பும் இந்தச் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்துள்ளநிலையில்- அதனை, அரசாங்கத்தினால் செயற்படுத்தமுடியாத தன்மையே காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகளின் மத்தியில், பொதுஜன ஐக்கிய முன்னணி தொடர்ந்தும் அரசாங்கத்தின் மீது குற்றங்களைச் சுமத்தி வருகின்றது. போர் நிறுத்த உடன்பாட்டின் மீறல் சம்பவமாகக் குறிப்பிடப்பட்டுள்ள - முல்லைத்தீவுக் கடலில் மீனவப்படகு தாக்கப்பட்ட சம்பவமும் இந்தக் குற்றச்சாட்டுக்குள் உள்ளடங்கும்.

அண்மைக்காலமாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கடைப்பிடித்துவரும் போக்கு, இலங்கையின் சமாதான நகர்வைப் பாதிக்காத விதத்தில் அமைந்துள்ளதை அவதானிக்கலாம். அதாவது, போர்நிறுத்த மீறல் என்ற அடிப்படையில் சம்பவம் எதுவும் நிகழ்ந்தால், கண்காணிப்புக்குழு- இரண்டு தரப்பு சாட்சியங்களையும் நோக்கி, ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது. இது ஜெனரல் புறூவ் ஹொவ்டே தலைமையிலான போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் நடைமுறைக்கு முற்றிலும் மாறுபட்டபோக்காகும்.

இந்த கண்காணிப்புக்குழு - சீனப்படகு மற்றும் திருகோணமலையில் கப்பல் தாக்கப்பட்டமை தொடர்பில் - தமிழீழ விடுதலைப் புலிகளைக் குற்றம் சுமத்துவதற்கு நேரடி ஆதாரங்கள் இல்லையென தெரிவித்தமை, பொதுஜன ஐக்கிய முன்னணியின் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட சீன மீன்பிடிப் படகு மற்றும் திருகோணமலையில் கப்பல் தாக்கியமை என்பவற்றில் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இல்லையானால், அந்தத் தாக்குதலை நடத்திய மற்றொருதரப்பு எதுவெனப் பொதுஜன ஐக்கிய முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த நிலையில் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியினதும், மக்கள் வீடுதலை முன்னணியினதும் செயற்பாடுகள் தொடர்கின்றன.

கடந்தவாரம் இது சம்பந்தமாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில்-சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யோசனைகளை லண்டனிலிருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க வாசித்துவிட்டு, அனுப்பியிருந்த பரிந்துரைகள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. பின்னர்



பேச்சுவார்த்தை அடுத்தவாரத் திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைகள் இரண்டு தரப்புக்கு இடையிலும் நடந்துகொண்டிருக்கும் அதேநேரம், ஜூலை மாதம் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னர் பொது இணக்கப்பாடு அறிக்கை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய ஏற்பாட்டின்படி எதிர்வரும் மே மாதம் 2 ஆம் வாரமளவில் இரண்டு தரப்பும் பொது உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திடவிருக்கின்றன. இதற்கான வைபவம் - கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகளே தற்சமயம்வரை எடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் பொதுச்செயலாளர்கள் கைச்சாத்திடும் அதேநேரம், ஜனாதிபதியும் இந்தநிகழ்வில் பங்குகொள்வார் எனப் பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வை முன்னிட்டு மீண்டும் ஒருமுறை சுமார் 5 இலட்சம் பேரைக் கொழும்பில் ஒன்று திரட்டுவதற்கான முன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் இடையில் மீண்டும் சிறு முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளது. போக்குவரத்துச் சபையின் 6 பிரிவுகளின் முகாமையை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்குக் கொடுப்பதில் ஜனாதிபதியின் ஆலோசனையை ரணில விக்கிரமசிங்கவின் நிர்வாகம் கருத்திற்கொள்ளாமல், எவ்வித கொடுப்பனவுகளுமின்றி இந்த 6 போக்குவரத்துப் பிரிவுகளையும் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி - பிரதமருக்கு இது தொடர்பில் கடிதம் எழுதியும்கூட, அன்றையதினமே ஜனாதிபதியின் ஆலோசனையை மறுக்கும்நிலையில் வெளிநாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை இருந்தாலும், இலங்கை அரசியலுக்குள் இருக்கும் இரட்டை நிர்வாகங்களின் இடையில் விரிசல்கள் தொட[illegible]தையே இந்த சம்பவம் சுட்டிக்க[illegible]டியுள்ளது.

ஜனாதிபதி தமது அதிகாரத்[illegible] பயன்படுத்தி, இரண்டு ஊடக மைய[illegible]களை தம்வசம் எடுத்துக்கொள்ளப் போகிறார் என்ற செய்தியின் தொடர்ச்சியாக, நாளை 7 ஆம் திகதி இது தொடர்பில் இறுதித் தீர்மானத்துக்கான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் 14 ஆம், 24 ஆம் திகதிகளுக்கு இடையில், சம்பந்தப்பட்ட 2 ஊடகங்களும் - ஜனாதிபதியினால் பொறுப்பேற்கப்படலாம் என்ற ஊகம் எழுந்திருக்கிறது.

இதற்கிடையில், அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்காருக்கும் - அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் முறுகல் தொடர்பாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மகரகம பிரதேசத்தில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படவிருந்த காணி விடயத்தில், அரசாங்கத்தின் கொள்கை - அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்காருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள[illegible] சம்பந்தப்பட்ட காணி தொடர்பா[illegible] பட்டியலில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டே இந்த அதிருப்திக்குக் காரணமாகும்.

இதற்கிடையில், அமைச்சர்களான கருஜெயசூரிய மற்றும் திலக் மாரப்பன ஆகியோருக்கு இடையிலும் முறுகல்நிலை ஒன்றும் தோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் பிரதித் தலைவர் நிலை தொடர்பிலேயே இந்த முறுகல் ஏற்பட்டுள்ளது.

## வெங்காயம், கருவாடு போன்றவற்றை பார்சல் மூலம் அனுப்பும் படையினர்!

(வடமராட்சி)

குடாநாட்டிலிருந்து தபால் மூலம் பார்சல் அனுப்பும் நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, இங்கிருந்து படையினர் வெங்காயம், கருவாடு என்பவற்றைத் தென்பகுதிக்கு அனுப்புவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பார்சல் அனுப்புவதற்குத் தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்ததை அடுத்து, தபால் நிலையங்களிலிருந்து பார்சல்கள் ஏற்கப்படுகின்றன. மிகவிரைவாகத் தரைவழிப்பாதை ஊடாகத் தபால் சேவைகள் நடைபெற்று வருவதால், சிலதினங்களில் இவை உரியவர்களைச் சென்றடைகின்றன.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தும் குடாநாட்டிலுள்ள படையினரும், பொலிஸாரும் இங்குள்ள வெங்காயம், கருவாடுகளை வாங்கித் தமது உறவினர்களுக்கு அனுப்புவதில் ஆர்வங்காட்டி வருகின்றனர். தினமும் குடாநாட்டிலிருந்து பெருமளவான பார்சல்கள்-தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. (23)

# ஈராக் போர்க்களம்




போர் தீவிரம் பெற்றுள்ள ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஜன்னலூடு உலகை நோக்கும் ஈராக்கியச் சிறுமியொருத்தி.



ஈராக்கின் நீர் வாய்க்காலொன்றில் ரோந்து செல்லும் பிரிட்டிஷ் மரைன் படையினர்.



தொடரும் விமான, ஏவுகணைத் தாக்குதல்களின் கோரத்தில் பஸ்ரா நகர்ப் பகுதி.



ரைகிரிஸ் நதி மீதான பாலத்தை கடந்து செல்லும் ஈராக்கியர். பின்னால், அமெரிக்கப் படைகள் காவலில்.

# தலைநகர் பக்தாத் அருகே கடும் மோதல் வெடித்தது!

## நிலைமைகள் குறித்து முரண்பட்ட தகவல்கள்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதிக்குள் தமது படைகள் நுழைந்துவிட்டதாக, அமெரிக்க அதிகாரிகள் நேற்று அறிவித்தனர். ஆனால், பக்தாத்தின் தென் பகுதியிலோ மத்திய பகுதியிலோ தாம் எந்த அமெரிக்கத் துருப்பினரையும் காணவில்லை என ரொய்ட்டர் செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க இராணுவப்பேச்சாளர், எமது படைகள் நகரினுள் நுழைந்து ரோந்து நடவடிக்கையை மேற்கொண்ட பின் திரும்பிவிட்டன. எனினும், கணிசமான தொகையான அமெரிக்கப் படைகள் நகரில் தங்கியுள்ளன என்றார். எத்தனை படையினர் தங்கியிருக்கின்றனர் என்றோ, ஈராக்கின் மத்திய பகுதி என்று அவர் எப்பகுதியை கருதுகிறார் என்றோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேசமயம், ஈராக்கிய தகவற்துறை அமைச்சர் சயீட் அல் சஹாப் தனது வாராந்த செய்தியாளர் மாநாட்டை நேற்று பக்தாத் நகரில் உள்ள ஹோட்டேலில் நடத்தியுள்ளார். பக்தாத்தில் எந்த அமெரிக் கப்படைகளும் இல்லை. ஈராக் சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்கப் படைகளை ஈராக்கிய குடியரசுப்படை விரட்டியடித்து விட்டது எனக் குறிப்பிட்டதுடன், எல்லாம் ஒழுங்காக இருக்கிறது என்று அம்மாநாட்டில் தெரிவித்தார் சஹாப்.

எவ்வாறாயினும், தலைநகர் பக்தாத் அருகே கடும்போர் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இரு தரப்பும் போரில் கடும் சேதங்களைக் கண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச விமான நிலைய ஓடுபாதையை அமெரிக்கப் படைகள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும், விமான நிலையத்தின் ஏனைய பகுதிகள் குறித்து அமெரிக்கப் படைகள் அக்கறை கொள்ளவில்லை எனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.



பக்தாத்துக்கான மோதலில் மோட்டார்த் தாக்குதல் நடத்தும் கூட்டுப்படையினர்.



வெறிச்சோடிக் கிடக்கும் பக்தாத் மாநகரம்.

# முதல் அமெ. செய்தியாளர் ஈராக் போரில் மரணம்!



மைக்கல் கெலி

ஈராக்கில் அமெரிக்க செய்தியாளர் ஒருவரும் நேற்றுமுன்தினம் பலியாகியுள்ளார். அமெரிக்க இராணுவத்தின் மூன்றாவது காலாட் படைப்பரிவுடன் மைக்கல் கெலி என்ற இந்தச் செய்தியாளர் பயணித்தபோது, அவர்கள் சென்ற ஹும்வீ வாகனம் தடம் புரண்டு கவிழ்ந்ததில் இவரும் இன்னுமோர் அமெரிக்க வீரரும் பலியாகினர்.

இவருடன் ஈராக் போரில் பலியான செய்தியாளர் தொகை ஐந்தாக உயர்ந்துள்ளது. முன்னதாக பி.பி.ஸி. படப்பிடிப்பாளர் கோல்ஸ்ரன், ஐ.ரி.என் செய்தியாளர் ரெலி லொயிட், அவுஸ்திரேலிய புகைப்படப் பிடிப்பாளர் மோரன், சனல் 4 செய்தியாளர் கேபிராடோ ஆகியோரும் ஈராக் போரில் பலியாகினர். இவர்களைத் தவிர இரு பிரிட்டிஷ் செய்தியாளர்கள் காணாமற்போயுள்ளனர்.



போரின் மத்தியில் பாதுகாப்பைத் தேடும் செய்தியாளர் குழுவொன்று.

## புஷ் நிர்வாகத்தில் பிளவு

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் இரண்டு மூத்த ஆலோசகர்களிடையே, ஈராக் போரில் ஐ.நா. பங்கு குறித்த விடயத்தில் சர்ச்சை வெடித்துள்ளது. தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான



ரைஸ்

கொண்டோலீசா ரைஸ் கருத்து வெளியிடுகையில், இப்போது உள்ள நிலையில் ஐ.நா வைப் போருக்குள் சம்பந்தப்படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

## உலகவலம்

எனினும், உள்துறை செயலர் கொலின் பவல், ஈராக் போரில் ஐ.நாவின் பங்களிப்பைப் பெறுவது குறித்த பேச்சுக்களை நாம் ஆரம்பித்து விட்டோம் எனக் குறிப்பிட்டுள்ளார். போரில் ஐ.நாவின் பங்களிப்பை எப்படி பெற்றுக்கொள்வது என்பது குறித்து நாளை புஷ்ஷும், பிளேயரும் சந்தித்துப் பேசவுள்ளனர்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி**

மலேசியாவில் இரண்டு வருடம் பிரித்தானியாவில் ஒரு வருடமும் கல்விகற்று நீங்களும் ஒரு பொறியியலாளராகலாம்.

☆ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
☆ ஆகக்குறைந்த தகைமை G.C.E (O/L)
☆ பாடநெறிக்கட்டணத்தை இலகுவாக தவணை முறையில் செலுத்தலாம்.
☆ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.
Far Overseas Educational Consultants
444C 2/1,Galle Road,Ratmalana
யாழ்.தொடர்புகளுக்கு 30 1/1 சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059 (வ.கி.மாகாண இணைப்பாளர்)
072-859041
E.Mail:- ecolenviros@ dynaweb.lk (சி-765)

# சாவகச்சேரி நகர மீள் புனரமைப்பு அதிகாரிகள் குழுவினர் ஆராய்வு!

யுத்தத்தினால் பெரிதும் சேத முற்றுள்ள தென்மராட்சிப் பகுதியை மீளப் புனரமைப்பது தொடர்பான கூட்டம் சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் நடவடிக்கைப் பிரிவின் பிராந்தியப் பணிப்பாளர் கே.பி.தர்மசிறி, தென்மராட்சி பிரதேச செயலாளர் கேதீஸ்வரன், சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் சரவணபவ, வட - கிழக்கு மாகாணசபையின் நகர அபிவிருத்தி அதிகாரசபைப் பணிப்பாளர் இராசநாயகம் மற்றும் இலங்கை மின்சாரசபை, போக்குவரத்து, நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச்சார்ந்த அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது - சாவகச்சேரி நகரை மீளப்புனரமைப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், வீதிகளை அகலப்படுத்தல், சேதமுற்ற தொழிற்சாலைகள், வீடுகளைப் புனரமைப்புச் செய்தல் போன்றன குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அத்துடன், இந்த அதிகாரிகள் குழுவினர் யுத்தத்தினால் சேதமடைந்துள்ள சாவகச்சேரி நகரின் பல்வேறு பகுதிகளையும் நேரில் பார்வையிட்டனர்.

# நிரந்தர சமாதானம் வரும்வரை அரசின் பணிகள் தொடரும்!

### தீவிரமாக முயற்சிப்பதாக பிரதமர் ரணில் தெரிவிப்பு

நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை நாட்டை அபிவிருத்தி செய்யவோ, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ எந்த அரசாங்கத்தாலும் முடியாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகவே, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும், அபிவிருத்திப் பாதையில் நாட்டை இட்டுச் செல்வதற்கும் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

இதனை இலங்கையில் வாழும் அனைத்துச் சமூகங்களும் உணர்ந்து கொள்வதாகவும், பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளதாக பிரதமரின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை கிடைத்த வெற்றிகள் குறித்து மகிழ்ச்சி அடையும் அதேவேளை,

நிரந்தர சமாதானம் கிட்டும்வரை தனது அரசாங்கத்தின் நடவடிக்கை தொடரும் என்று பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

இதேவேளை, சுய இலாபத்துக்காக சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்க முயலும் சிலரின் நடவடிக்கைகள் கவலை அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், சமாதானத்துக்கு எதிராகச் செயற்படுவோருக்கு தமது எதிர்ப்பைக் காட்டும் வகையிலும் மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள சத்தியாக்கிரகத்தை வரவேற்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

# பெண்களின் உரிமைகள் தொடர்பாக தீர்க்கமான பார்வை தலைவரிடமுண்டு

## அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி

(கிளிநொச்சி)

பெண்கள் விடுதலை தொடர்பாகவும், பெண்கள் உரிமைகள் தொடர்பாகவும் தமிழீழத் தேசியத் தலைவர் ஆழமான, தீர்க்கதரிசனமான பார்வையைக் கொண்டுள்ளார்.

- இவ்வாறு அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்துள்ளார். நேற்று கிளிநொச்சியில் நடந்த மகளிர் விவகாரக் குழுவின் கூட்டத்தின் முடிவில் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சமாதான நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவதற்கான பணிகள் பற்றி ஆராயப்பட்டன. வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் முன் வைக்கப்பட இருக்கின்ற திட்டங்கள் பற்றியும், இது தொடர்பான விடயங்களை எப்படி உள்ளடக்குவது என்பது பற்றியும் ஆராயப்பட்டது.

மிக முக்கியமாக, வடக்கு - கிழக்கில் வாழுகின்ற பெண்களைப் பொறுத்த வரைக்கும், அவர்களின் அபிவிருத்தியில் பிரதானமாக மீள் குடியேற்றப் பிரச்சினை உள்ளது. எங்களுடைய மக்கள் மிக நீண்ட காலமாக தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு முகம் கொடுத்து வந்துள்ளார்கள். தொடர்ச்சியான இடப்பெயர்வுகளையும் சந்தித்திருக்கிறார்கள். இந்த இடப்பெயர்வுகளால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டது பெண்களும், குழந்தைகளுமாவர்.

மீள அவர்கள் சொந்த இடத்தில் போய் குடியேறும்போதுதான் அவர்களுடைய ஆவல்கள் முற்று முழுதானதாக இருக்கும். மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பற்றி உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளில் பேசப்பட்டுள்ளது. இந்த விடயங்களை வற்புறுத்துவதன் காரணம் என்னவென்றால், இந்தக் கருத்துக்கள் உயர்மட்டப் பேச்சுவார்த்தைக்கும் அழுத்தத்தைக் கொடுக்கும் என்பதற்காகவே ஆகும் என்றார்.

### உயர்மட்டச் சந்திப்புக்கான...

தரப்பால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களும் இநத உப குழுவில் அங்கம் வகிக்கின்றனர். நோர்வே அரசால் நியமிக்கப்பட்ட அனுசரணையாளர் இந்த உபகுழுவுக்கான கூட்டங்களை நடத்துகின்றார்.

இம்முறை கூடிய - மகளிர் விவகார உபகுழுவின் உறுப்பினர்கள், இம்மாதம் இடம்பெறவுள்ள உயர்மட்டப் பேச்சில் சமர்ப்பிக்கப்படவுள்ள தமக்கான திட்டவரைபை பூர்த்தி செய்துகொண்டனர்.

இந்த உபகுழுக் கூட்டத்தில் - சிறான் இயக்குநர் செல்வின் இரேனியஸ், சிறானின் வேலைத் திட்டம் பற்றியும் அதன் முன்னுரிமைகள் பற்றியும் எடுத்துக் கூறினார். சிறானினுடைய சகல வேலைத்திட்டங்களிலும் பெண்ணியப்பார்வை எவ்வாறு உள்ளடக்கப்படலாம் என்பது பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்த இரு அமைப்புக்களும் தமக்கிடையே மிகச்சிறந்த ஒத்துழைப்பை எவ்வாறு ஏற்படுத்திக் கொள்வது என்றும் ஆலோசிக்கப்பட்டது.

பெண்கள் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட மனவடு தொடாபாகவும், அதற்குத் தேவைப்படும் வேலைகள் பற்றி இந்த உபகுழு விசேட கவனம் செலுத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

கடந்த இரு நாட்கள் நடைபெற்ற கூட்டத்தின் இறுதியில்,

அரசியலில் பெண்களுக்கு சமசந்தர்ப்பம் கிடைப்பதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளல்,

பாடநூல்களில் உள்ள பெண்ணிலை தொடர்பான சமனற்ற நிலைகளை மாற்றுவதோடு கல்விக்கட்டமைப்பை மாற்றுவது தொடர்பாகப் பரிசீலித்தல்.

சமாதான முன்னெடுப்புக்கள் இடம்பெறும் நிலையிலுங்கூட இராணுவ மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகளில் இடம்பெறும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கல் தரப்பினரிடம் எடுத்துச் செல்லல்

- போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இறுதி நாளான நேற்று உப குழு உறுப்பினர்கள் குருகுலம் சிறுவர் இல்லத்தைச் சென்று பார்வையிட்டனர் .

பெண்கள் தொடர்பான உப குழுவின் அடுத்த கூட்டம் மட்டக்களப்பில் ஜூன் மாதம் இடம்பெறும்.

### சமாதான...

தானத்துக்கு எதிரானவர்கள் என்ற கருத்து வலுப்பெறலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

சத்தியாக்கிரகத்துக்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆகியன பாராட்டுத் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

### விடுதலைப்...

மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கும் பட்சத்தில் - விடுதலைப் புலிகளுடன் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தவுள்ளதாகக் கூறிய ஜனாதிபதி, தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியின் சமாதான நடைமுறை, இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளதாகத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தம்வசம் வைத்திருக்கும் ஆயுதங்களைக் களைவதற்கு, அமெரிக்கா தன்னால் இயன்ற உதவிகளை வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி அமெரிக்கத் தூதுவரைக் கேட்டுக் கொண்டார். (01)

## மன்னாரில் அகதிகள் கைது

தமிழகத்திலிருந்து நாடு திரும்பிய 23 அகதிகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு - மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வந்திருந்த அகதிகளில் ஒருவரிடம் ஜெலற்றின் வெடிமருந்துக் குச்சிகள் காணப்பட்டதாகவும், அவர் கடற்படையினரால் தாக்கப்பட்டதாகவும் - இவர் முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த கந்தசாமி ஜெயசீலன் (வயது 31) என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வைரஸ் நோயாளி கட்டுநாயக்கவில்!

**Severe Acute Respiratary Syndrom** (சார்ஸ்) வைரஸ் நோயினால் பீடிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் இளம் பெண் ஒருவர் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு இலங்கை வந்த குவைத் எயார் லைன்ஸ் விமானத்தில் வந்துள்ளார். இவர் மத்திய கிழக்கு விமான சேவையொன்றின் பணியாளர் எனத் தெரியவருகிறது.(01)

### மருதனார்மடத்தில்...

முடிவு செய்துள்ளதாகவும், இதற்கான பூர்வாங்கப் பணிகள் மூன்று மாதங்களுள் முடிவடைந்துவிடும் எனவும் அமைச்சர் குணவர்த்தன தெரிவித்தார். (சு,09)

### வெளிநாட்டு உதவியை...

மென்று விரும்பினாலும், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் தொடர்பான விடயங்களில் தான் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப முன்பு, அரசியல் தீர்வு பற்றிப் பேச முடியாது என்று தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் ஏற்கனவே தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளபோதிலும், ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கூடுதல் உதவிகளைப் பெறுவதற்காகவே அரசாங்கம் அரசியல் தீர்வு பற்றிப் பேச வேண்டுமென்று அவசரம் காட்டுவதாகவும் கேணல் கருணா சொன்னார்.

அரசியல் தீர்வு பற்றி பேசப்படுவதனூடாக - விடுதலைப் புலிகளுடன் இணக்கம் ஏற்பட்டுள்ளது, தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது போன்ற மாயைகளைத் தோற்றுவித்து, இதன்மூலம் கூடுதல் உதவிகளைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் முயல்வதாக கேணல் கருணா மேலும் தெரிவித்தார்.

ஈராக் போர் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் -

வல்லரசுகள் தமது தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தியைப் பயன்படுத்தி தமது பக்கம் சார்ந்த செய்திகளையே வெளியிட்டு வருகின்றன. மனிதப் பேரழிவுகள் குறித்த விபரங்கள் இனிமேல்தான் வெளிவரலாம் என்றார்.

10-04-2003 வியாழன் ஆரம்பமாகின்றது

"திரியொன்று உருகாமல் ஒளி இங்கு இல்லை
விதையொன்று மடியாமல் பயிர் வளர்வதில்லை."

**திருமறைக் கலாமன்றம்**
தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை
**பலிக்களம்**
(திருப்பாடுகளின் காட்சி)
மன்ற அரங்கில் | மாலை 7.00 மணி
10,11,12,13 ஏப்ரல் 2003 - 4 நாள்களுக்கு
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

குறிப்பு:- பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். ஆசனங்களுக்கான பதிவுகளை இன்று முதல் யாழ். மன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம். அன்பளிப்பு: 20.00

கல்வாரிப் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P/Fax: 021-222 2393
E-mail: cpajaffna@ eureka.lk
website: www.cpateam.org
(சி-763)
-திருமறைக்கலாமன்றம்.

உங்கள் அபிமானத்திற்குரிய அதே



**ரவிவர்மா**
யாழ். பல்கலைக்கழக
நூலகக்கேட்போர் கூடத்தில்
ஏப்பிரல் 5,6,7,8 ஆம் திகதிகளில்
9 - 5 மணிவரை
ஆரம்ப காலப் பதிப்புப் படங்களின் காட்சி
(2ᵢ:3)

சியானாஸ் ரெக்ஸ்ரைல்ஸ் அன்ட் ரெயிலறிங்
77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.0212222967.

தர்சினி அழகுமாடம்
133, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 0777110631, 0777110747

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.